# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2031 மார்கழி 26 புதன்கிழமை (10-01-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:45


# சொல்ஹெய்ம் இன்று கொழும்பு வருகிறார்!

## ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர் இருவரையும் சந்தித்துப் பேசுவார்

கொழும்பு,ஜனவரி10

**இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தைக் கையாளும் நோர்வே நாட்டின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இன்று கொழும்பு வருகிறார்.**

**கொழும்பில் தங்கியிருக்கும் காலத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை அவர் சந்தித்து விரிவாகப் பேச்சு நடத்துவார் எனக் கூறப்படுகின்றது.**

கொழும்பு வரும் எரிக் சொல்ஹெய்ம் இம்முறை வன்னிக்குச் சென்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரனையோ ஏனைய புலிகள் இயக்கத் தலைவர்களையோ சந்திக்க முயற்சிப்பாரா என்பது குறித்துத் தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

இனப்பிரச்சினைக்குச சமாதானத் தீர்வை எட்டும் நோர்வேயின் முன் முயற்சிகள் தொடர்பாக ஸ்ரீலங்கா

(14ஆம் பக்கம் பார்க்க)

## கான்ஸ்டபிளை கிணற்றில் தள்ளிய கான்ஸ்டபிள்!

யாழ்ப்பாணம்,ஜன.10

இரண்டு பொலீஸாருக்கு இடையில் ஏற்பட்ட தகராறினால் ஒருவர் மற்றையவரைப் பிடித்துக் கிணற்றில் தள்ள, கிணற்றில் விழுந்தவர் மரணமானார்.

கொடிகாமத்தில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் இறந்தவரின் பிரேத பரிசோதனையை மேற்கொள்வதற்காக, யாழ்.போதனா வைத்திய சாலை சட்ட வைத்திய அதிகாரி அழைக்கப்பட்டார்.

கொடிகாமத்தில் இருந்து நேற்று யாழ்.ஆஸ்பத்திரிக்குச் சென்ற பொலீஸாரே சட்ட வைத்திய அதிகாரியை அழைத்துச் சென்றனர். பிரேத பரிசோதனை அறிக்கை பற்றிய விவரம் தெரியவரவில்லை. (உ-15-139)

# உடன் யுத்தநிறுத்தம் செய்வதற்கு அரசுக்கு அழுத்தம் கொடுங்கள்!

## நெதர்லாந்துத் தூதரிடம் தமிழ்க் கட்சிகள் கோரிக்கை

கொழும்பு,ஜன.10

புலிகளின் யுத்தநிறுத்தத்தை ஏற்று அரசாங்கமும் உடனடியாக யுத்தநிறுத்தத்தை அறிவிப்பதற்கு அரசு மீது அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று நெதர்லாந்து நாட்டுத் தூதுவரை நேற்றுச் சந்தித்த தமிழ்க் கட்சித் தலைவர்கள் வலியுறுத்தி உள்ளனர்.

நெதர்லாந்துத் தூதரகத்தில் நேற்றுப் பிற்பகல் 3 மணிமுதல் சுமார் 1 மணிநேரம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

ரெலோ முதல்வர் ந.ஸ்ரீகாந்தா, தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ். மேயர் ந.ரவிராஜ், தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அ.விநாயகமூர்த்தி, அதன் பொதுச் செயலாளர் குமரகுருபரன், ஈ.பி.ஆர்.எல்.எவ்.சுரேஷ் அணி லிங்கேஸ்வரன், தேசிய தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எஸ்.செல்லச்சாமி, ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் மனோகணேசன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

யுத்தத்தை நிறுத்தி சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் தமிழ்த் தலைவர்கள் நெதர்லாந்துத் தூதுவரிடம் கோரிக்கை விடுத்தனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்று கூடுகின்றது

கொழும்பு,ஜன.10

இந்த ஆண்டின் முதலாவது அமர்வுக்காக நாடாளுமன்றம் இன்று கூடுகிறது.

இன்று சபை கூடும் போது பாரிஸில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் குறித்த விரிவான அறிக்கை ஒன்றை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் சபையில் சமர்ப்பிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்று முதல் மூன்று நாள்களுக்கு நடைபெறும் இந்தக் கூட்டத் தொடரின் இறுதியில் அவசரகாலச் சட்டநீடிப்பு பிரேரணை மீதான விவாதம் நடைபெறும். (உ-6)

### ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல்

## நீதிமன்றம் செல்வதற்கு தயாராகிறது ஜே.வி.பி.

கொழும்பு,ஜன.10

"புறக்கோட்டைப் பகுதியில் ஆர்ப்பாட்டம் நடத்திய ஜே.வி.பி. கட்சியின் ஆதரவாளர்கள் மீது பொலீஸார் நடத்திய தாக்குதலுக்கு எதிராக நீதிமன்றம் செல்ல இருக்கின்றோம்."

- இவ்வாறு நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய ஜே.வி.பியின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ச - தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொலீஸார் எமது ஆதரவாளர்கள் மீது கண்மூடித்தனமாக நடத்திய தாக்குதலை எமது கட்சி வன்


(14ஆம் பக்கம் பார்க்க)



கோட்டை, புறக்கோட்டைப் பகுதிகளில் நேற்றுமுன்தினம் பிற்பகல் ஆர்ப்பாட்டம் நடத்திய ஜே.வீ.பியினர் மீது பொலீஸார் வாகனத்தில் இருந்தபடி தண்ணீரை பீச்சி அடிப்பதை முதல் படத்திலும் ஆர்ப்பாட்டக்காரர்களை நோக்கிப் பொலீஸ்காரர் ஒருவர் கண்ணீர் புகைக் குண்டுத் தாக்குதல் நடத்துவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்தைக் கண்டித்தும் ஜே.வீ.பியினர் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

## தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிரிழந்தோர் நினைவுதினம்



யாழ்ப்பாணம்,ஜன.10

1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிநாள் நிகழ்வின் போது அநியாயமாக உயிரிழந்த அப்பாவிப் பொதுமக்கள் ஒன்பது பேரின் 27 ஆவது வருட அஞ்சலி நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு யாழ்.முற்றவெளியில் உள்ள நினைவுத் தூபியின் முன்றிலில் இடம்பெறும்.

இன்றைய அஞ்சலி நிகழ்வில் தமிழ் அமைப்புகள், மதகுருமார்கள், பொதுமக்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வைபவ ஏற்பாட்டுக் குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். *(நினைவு நாள் விசேட கட்டுரை 9ஆம் பக்கத்தில்)* (உ-5)

### எழுச்சி நிகழ்வுகள் குறித்து

## கிராமங்கள் தோறும் பல்கலை மாணவர்கள் தீவிர பிரசாரம்

யாழ்ப்பாணம்,ஜன.10

ஈழத்தமிழ் மக்களின் அபிலாஷை, சுயநிர்ணய உரிமையே என்பதை சர்வதேச உலகுக்கும் அம்பலப்படுத்தும் நோக்குடன் யாழ்.பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டுடன் மேற்கொள்ளப்படும் எழுச்சி நிகழ்வுகள் குறித்து வலிகாமம் மேற்குப் பிரதேச சபை அலுவலகப் பிரிவில் உள்ள கிராமங்கள் தோறும் பல்கலைக்கழக மாணவர்கள் குழுக்களாகப் பிரிந்து சென்று நேற்று விளக்கமளித்தனர்.

பத்துப் பத்துப் பேரைக் கொண்ட சுமார் எட்டுக் குழுக்கள் வீடு வீடாகச்சென்று நேற்று பொதுமக்களைச் சந்தித்து தமது முயற்சியின் நோக்கங்களைப் பொதுமக்களுக்கு விளக்கினர்.

பொதுமக்கள் தமது முயற்சிகளுக்கு முழு ஆதரவும், ஒத்துழைப்பும் தர முன்வந்ததாகவும் -


எதிர்வரும் 17ஆம் திகதி காலை 10.30 மணிமுதல் யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள - ஈழத்தமிழரின் அபிலாஷைகளை ஒரே குரலில் ஒலிக்கும் - 'பொங்கு தமிழ்' நிகழ்ச்சியில் பங்குபற்றுவதற்கு அவர்கள் அனைவரும் இணக்கம் தெரிவித்ததாகவும் -

மக்களைச் சந்தித்த குழுக்களில பங்குபற்றிய பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (உ)

## யாழ். மேயராக ரவிராஜ் நேற்று சத்தியப்பிரமாணம்

யாழ்ப்பாணம்,ஜன.10

யாழ்.மாநகர சபையின் புதிய மேயராக இதுவரை பிரதி மேயராக



இருந்த சட்டத்தரணி என்.ரவிராஜ் நேற்று சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

கொழும்பிலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற எளிமையான வைபவத்தில் கட்சியின் உப தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரி முன்னிலையில் இவர் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

இதேவேளை பிரதிமேயராக செல்லன் கந்தையன் இம்மாத இறுதியில் நடைபெறும் மாநகர சபைக் கூட்டத்தில் புதிய மேயரின் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1998 செப்ரெம்பரில் யாழ்.மாநகரசபை அலுவலகத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் முன்னாள் மேயர் பொன்.சிவபாலன் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இதுவரை காலமும் மேயர் பதவி காலியாகவே இருந்து வந்தது. அப்பணியை பிரதி மேயர் ரவிராஜ் மேற்கொண்டு வந்தார்.(உ-5-173)

## நாளை கப்பல் சேவை

யாழ்ப்பாணம்,ஜன.10

காங்கேசன்துறைக்கும் - திருகோணமலைக்கும் இடையில் 'லங்கா முடித்த' கப்பல் மூலமான பயணிகள் சேவை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

கப்பலில் பயணம் செய்வதற்காக வடக்கின் மீள்குடியேற்ற புனரமைப்பு அதிகார சபை அலுவலகத்தில் 'பி' பட்டியலில் பதிவுசெய்து பயணத்தை மேற்கொள்ள முடியாதவர்களையும் 'சி' பட்டியலில் பதிவினை மேற்கொண்டவர்களையும் உரிய பதிவுகளுக்காக இன்று புதன்கிழமை காலை அலுவலகத்துக்கு வருமாறு கோரப்பட்டுள்ளது.

இதேவேளை-

வடமராட்சியில் 524 ஆவது பிரிகேட்டிலிருந்து பயண அனுமதி கிடைக்கப் பெற்றோர் (அதாவது எல்.எம்.-1 முதல் எல்.எம்.-8 வரையான பட்டியல்களில் பெயர் விவரம் உள்ளோர் மட்டும்) மற்றும் தீவுப்

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## பல்கலைக்கழக ஆசிரியர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.10

யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் இன்று புதன்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட பொது அறையில் இடம்பெறும். (ம)

## பத்திரிகையாளர் மாநாடு

நெல்லியடி,ஜன.10

பனை அபிவிருத்திச் சபையின் இந்த ஆண்டு அபிவிருத்தி நடவடிக்கைகள் சம்பந்தமான பத்திரிகையாளர் மாநாடு நாளை வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கண்டி வீதியில் உள்ள பனை அபிவிருத்திச் சபை தலைமை அலுவலகத்தில் இடம்பெறும்.

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் எம்.பாக்கியநாதன் கலந்து கொள்ளும் இம் மாநாட்டில் சகல ஊடகவியலாளர்களையும் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-109)

---

**பிரத்தியேக வகுப்பு**
**2003 A/L**
**பௌதிகவியல்**
**திரு.கருணாநிதி B.Sc (Spl)**
ஆரம்பம்:
இன்று 10.01.2001
புதன் 4.30 (ப.நே.)
கோயில் வீதி, நல்லூர்.
G.T.Z. இற்கு அண்மையில்
(82767)

---

**U.S.C**
உதயதாரகை கல்விக் கழகம்
கொற்றாவத்தை
**A/L 2003**
கலைப் பிரிவுகளும் ஆரம்பமாகி விட்டன.
அளவையியல் : V.ரகுமார்
தமிழ் : இரா.அகிலன்
இந்து நாகரீகம் / இந்து சமயம் : இராஜேஸ் கண்ணன்
நாடகமும் அரங்கியலும் : N.ராம்
**விரைவில்**
யாழ்நகரில் அளவையியல்
BY: Mr.V.ரகுமார்
(82760)

---

நாளை ஆரம்பம்
**SUBRA (14)**
சித்தன்கேணி
**Spoken English & GRAMMAR**
**BRITTO**
பிரிவு 4
11.01.2001
காலை 8.30
**2003 A/L** ஆரம்பித்து விட்டது
(82766)

---

**நாகம்ஸ்**
சுன்னாகம்
**டைட்டானிக்**
(தமிழ் – பிலிம்)
✪ டைட்டானிக் என்ற கப்பலுக்கு நடந்த பயங்கரம்.
✪ இது ஓர் உண்மைச் சம்பவம். இது ஓர் உண்மையான காதல் சம்பவம்.
✪ உலகில் உள்ள எந்தச் சக்திகளாலும் அவர்கள் இருவரையும் பிரிக்க முடியாது. (82777)
காட்சி நேரங்களில் மாற்றம்
புதிய நேரம்: 10.30, பி.ப. 2.30.

---

**ராஜா** யாழ்ப்பாணம்
பிரசாந்த், சிம்ரன், லைலா, ரகுவரன், வையாபுரி
நடிப்பில்
**பார்த்தேன் ரசித்தேன்**
காட்சிகள்: 10.30, 2.30 (பு.நே.)
(C/14702)

---

யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய
அபிவிருத்தி நிதிக்காக
பழைய மாணவர் சங்கம் நடத்தும்
## அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு

14.01.2001 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெறவிருந்த மேற்படி அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தால் 15.04.2001 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும் என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

(82786) - தலைவர், செயலாளர்.

---

## அதிதீரன் மின்சார தொழில் நுட்ப நிலையம் யாழ்ப்பாணம்

கீழ்க்காணும் பயிற்சி நெறிகளுக்கு பயிலுநர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்

★ வீட்டு மின்சுற்று இணைப்பு - 6 மாதம் ரூபா 750/=
- 12 மாதம் ரூபா 1400/=
★ மின் இயந்திரங்கள் மீள முறுக்கதல் - 6 மாதம் ரூபா 900/=

(விண்ணப்பங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது)
**விண்ணப்ப முடிவு திகதி - 18-01-2001**

❋ தொழில் வாய்ப்பு-
மின்னியலாளர், நீர்க்குழாய் பொருத்துநரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
(தொழில் நிலை ஒரு வருட கால எல்லை)

தகைமைகள்:-
1) பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களில் அறிமுறை (Theory) யும், பயிற்சியும் பெற்றிருத்தல் வேண்டும்.
2) குறைந்தது இரண்டு வருட அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.
3) 18 தொடக்கம் 25 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவு திகதி - 15-01-2001**
* விண்ணப்பங்கள் யாவும் சுயமாகத் தயாரித்து அனுப்புதல் வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி:-
இயக்குநர், அதிதீரன் மின்சார தொழில்நுட்ப நிலையம்
(82753) இல.135,கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

---

## பரந்தன் இரசாயன ஊழியர் சம்பளம்

பரந்தன் இரசாயன கொம்பனி லிமிட்டெட் தொழிற்சாலை ஊழியர்களின் 2000ஆம் ஆண்டுக்கான சம்பளக் கொடுப்பனவு நாளை 11ஆம் திகதி பிற்பகல் தொடக்கம் 53/4 அன்னசத்திர லேன், கந்தர்மடம் என்ற முகவரியில் அமைந்துள்ள கொம்பனியின் தற்காலிக அலுவலகத்தில் வழங்கப்படும்.

தலைவர்,
(C/14723) பரந்தன் இரசாயன கொம்பனி லிமிட்டெட்

---

## பாராட்டி வாழ்த்துகிறோம்



**உயர்திரு. சின்னையா நடராஜலிங்கம்**
(CHIEF MANAGER, BANK OF CEYLON SUPER GRADE BRANCH, JAFFNA.)

எமது புலோலிக் கிராமத்தைச் சேர்ந்தவரும், எமது பேரன்பிற்கும், பெருமதிப்பிற்குமுரியவரான பருத்தித்துறைக் கிளை இலங்கை வங்கி முகாமையாளராகக் கடமை புரிந்த உயர்திரு. சின்னையா நடராஜலிங்கம் சிரேஷ்ட முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்று இலங்கை வங்கி யாழ்ப்பாணம் மேற்தரக்கிளையின் பிரதான முகாமையாளராக இன்று (10-01-2001) புதன்கிழமை பதவி ஏற்பதையிட்டு மிக்க மகிழ்ச்சியுடன் பாராட்டி வாழ்த்துகிறோம். இவரது பணி மென்மேலும் சிறப்படையவும் இறைஆசி வேண்டிநிற்கிறோம்.

சி.செல்வராசாவும் குடும்பத்தினரும்
அத்துளு அம்மன் கோயிலடி,
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

மந்திகை,
புலோலி.
(C/14696)

---

## Computer courses
COMMENCES ON 14-01-2001(Sunday) at 11.00a.m

**DMSO**
Diploma in Microsoft Office
Duration : 5months
Course fee : 8000.00

**HW**
Diploma in Hardware Technology
Duration : 6 months
Course fee : 7000.00

**DIT**
Diploma in Internet Technology
Duration : 4 months
Course fee : 6000.00

**DCP**
Diploma in Computer Programming
Duration : 8 months
Course fee : 10 000.00

**BIT**
BECHELOR OF INFORMATION TECHNOLOGY
Conducted by ICT of the Colombo University
Duration : 3 Years (6 Semesters)

**PCS**
Diploma in PC Specialist
Duration : 8 months
Course fee : 10 000.00

**ACS**
Advanced Diploma in Applied Computer Science
Duration : 1 Year
Course fee : 25 000.00

**CERTIFICATE COURSES**
MS Excel 2000, MS Word 2000, MS Access 2000, MS Power Point 2000, AutoCad, Page Maker, Corel DRAW, Java, Visual Basic, Pascal, Visual C, C++, dBase III+ and Computer Hardware.

**DSE**
Higher Diploma in Software Engineering
Duration : 1 Year
Course fee : 20 000.00

### Institute of Informatics Studies
(Affiliated with *IMIS*, UK)

**Head Office:**
IIS, 100, Clock Tower Road, Jaffna.
T.P No. 021-2831 E-mail : iis@sltnet.lk

**Branches :**
IIS, Nelliady, Karaveddy.
IIS, Main Street, Chankanai.

(C/14724)

# உதயன்

## நாட்டு நலன் கருதியதா?

இராணுவத்துக்கு மேலும் பதினையாயிரம் பேரைத் திரட்டும் நடவடிக்கை — முயற்சி — மீண்டும் ஆரம்பமாக உள்ளது.

இராணுவத்துக்குத் தேவைப்படும் ஆளணியினரைத் திரட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை இலக்கம் ஆறாகும் இது. அண்மைக் காலத்தில் ஏற்கனவே ஐந்து தடவைகள் இந்த முயற்சி மேற்கொள்ளப் பட்டதாயினும் பலன் கிடைக்கவில்லை; தென்னிலங்கை இளைஞர்கள் இராணுவத்தில் சேர்வதற்கு போதிய அளவு ஆர்வம் காட்டவில்லை.

இளைஞர்களைப் படைக்குத் திரட்டுவதற்காக பத்திரிகைகள் மற்றும் ஊடகங்களில் கவர்ச்சியான விளம்பரங்கள் செய்யப் பட்ட போதிலும், அதிகாரிகளால் தமக்குத் தேவையான ஆளணியினரைத் திரட்டமுடியவில்லை.

இவ்வருட ஆரம்பத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினால் ஆரம்பிக்கப்பட்ட ''வெப் தனத்தின்'' முதலாவது பிரசுரத்திற் கூட, தேசப்பற்றுள்ள இளைஞர்களை இராணுவத்தில் சேருமாறு கேட்கும் வேண்டுதல் இருந்தது. அந்தளவுக்கு அரசாங்கம் உச்சப் பிரசாரம் செய்த போதிலும், ஆறாவது தடவையாக ஆள் சேர்ப்பு முயற்சியில் ஈடுபட நேர்ந்துள்ளது!

இதன் அர்த்தம் என்ன?

இராணுவத்தில் சேர்ந்து தமது உயிரைப் பலி கொடுக்க தென்னிலங்கை இளைஞர்கள் விரும்பவில்லை. போரைத் தொடர்ந்து நடத்தி, அதில் அரசியல் குளிர்காய ஆட்சியில் உள்ளோரில் கணிசமான பகுதியினரும், போரை வைத்துப் பணம் சம்பாதிப்போரும் ஆயுத விற்பனைத் தரகர்களும் விரும்பினாலும், தெற்கு இளைஞர்கள் படையில் சேர்வதற்கு முன்வருகிறார்கள் இல்லை என்பதாகும்.

தொண்டர் படை ஒன்றைத் திரட்டி மூன்று வருடங்களில் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்துவிட முடியும், அழித்து விட முடியும் என்று பிரதமரும், படைகளுக்கு ஒருலட்சம் பேரைத் திரட்டித் தர முடியும் என்று பௌத்த பிக்குமாரும் முழங்கின்றனர் ஆனால் சிங்கள இளைஞர்களின் மனநிலையோ வேறாக உள்ளது.

இன்னொரு நாட்டுடன் போர் புரிவது போன்று, நாட்டை மீட்பதற்குத் தேசப்பற்றுடன், தியாக உணர்வுடன் படையில் சேருமாறு கேட்கிறார்கள் போரை நாடும் அரசியல் தலைவர்கள். போர் இதுவரை பல்லாயிரம் சிங்கள இளைஞர்களைப் பலி கொண்டு விட்டது. அது குறித்து கவலையோ அக்கறையோ போர் நாடிகளுக்கு இல்லை. களத்தில் மடிபவர்கள் அவர்களின் பிள்ளைகளோ, உறவினரோ அல்லர் என்பதால்.

கிராமப்புறச்சிங்கள இளைஞர்களின் உயிர்கள் பறிபோனாலும் பரவாயில்லை, அரசாங்கத்தின் கௌரவம் விலை போகக் கூடாது என்று எண்ணுகிறார்கள் ஆட்சித் தலைவர்கள்.

விடுதலைப் புலிகள் போர் நிறுத்தம் செய்துள்ள போதிலும் — முதலில் பேசவரட்டும்; பின்னர் போர் நிறுத்தம் குறித்துப் பேசலாம் என்று கூறுவது கௌரவப் பிரச்சினையே! அதன் பொருட்டு சிங்கள இளைஞர்கள் மீது அரசு போரைத் திணிக்க முற்படுகிறது. தமிழர்களின் நியாயமான உரிமைகளை வழங்கக் கூடாது என்ற நோக்குடன் தெற்கு மக்களிடம் போரைத் திணிக்கும் முயற்சி ஏன்?

அழிவுகளை நிறுத்தி ஆக்கபூர்வமாகச் சிந்திக்க கூடாதா? அரசின் கௌரவத்தைவிட நாட்டினதும், மக்களினதும் நலனுக்கு முன்னுரிமை தரக் கூடாதா?

# தொழிலமைச்சர் நியமனத்தால் புஷ் எதிர்நோக்கும் நெருக்கடி

வாஷிங்ரன், ஜன. 10

அமெரிக்காவின் அடுத்த அதிபராகத் தெரிவாகியுள்ள ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் பதவியேற்பதற்கு முன்னரேயே நெருக்கடியில் சிக்கியுள்ளார்.

தொழிலமைச்சராக லிண்டா சவெஸ் என்பவரை புஷ் நியமித்ததற்கு எதிர்த்தரப்பான ஜனநாயகக் கட்சியினர் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருப்பதே நெருக்கடிக்குக் காரணம் ஆகும்.

உலக அரங்கில்

1990 இல் சட்டவிரோதமாக அமெரிக்காவில் குடியேறிய ஒரு பெண்ணுக்கு லிண்டா புகலிடம் அளித்ததாக எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

1990 ஆம் ஆண்டு தொழிலமைச்சர் வீட்டில் கௌதமாலா நாட்டைச் சேர்ந்த அந்தப் பெண் தங்கியிருந்ததாகவும், அவருக்குத் தேவையான சகல பண உதவிகளையும் அமைச்சர் லிண்டா செய்ததாகவும் கூறப்படுகிறது.

கௌதமாலா நாட்டைச் சேர்ந்தவர் என்று கூறப்பட்ட போதிலும், அமைச்சர் வீட்டில் தங்கியிருந்த பெண்ணிடம் அதற்குரிய குடிவரவு ஆவணங்கள் எதுவும் இருக்கவில்லை என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

சட்டவிரோதக் குடியேற்றவாசிகளுக்கு அடைக்கலமளிப்பதும், வேலைக்கு அமர்த்துவதும் அமெரிக்காவில் சட்டப்படி குற்றமாகும்.

இவற்றைச் சுட்டிக்காட்டும் ஜனநாயகக் கட்சியினர்' பதவியேற்க முன்னரேயே சட்டத்தை மதிக்காத லிண்டா அமைச்சர் ஆகிய பின்னர் சட்டத்தை மதித்து நடக்க முடியுமா? என்று கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதற்கிடையில், புஷ்ஷால் சட்டமா அதிபராக நியமிக்



கப்பட்டுள்ளவர் கறுப்பினத்தவர் மீது துவேஷம் கொண்டிருப்பதாக குற்றச்சாட்டு கூறப்படுகிறது.

இத்தகைய குற்றச்சாட்டுகளால் பதவியேற்க முன்னரேயே புஷ் நெருக்கடிகளைச் சந்திக்க நேரிட்டுள்ளது.

(ஒ-6)

## கிறிஸ்தவ மதகுருமார் மீது தாக்குதல்

இந்தியாவின் ராஜஸ்தான் மாநில எல்லைப்பகுதிக் கிராமம் ஒன்றில் சமூகசேவையில் ஈடுபட்டிருந்த கிறிஸ்தவ மதகுருமார்கள் 3 பேர் தாக்குதலுக்கு உள்ளாகினர்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக 3 பேரைக் கைது செய்துள்ளதாகவும் மேலும் சிலரைத் தேடி வருவதாகவும் மாநிலப் பொலீஸார் தெரிவித்தனர்.

(ஒ-6)

## சமதா கட்சியில் அதிருப்தி நீங்கியது

இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸின் சமதாக் கட்சியிலிருந்து பிரிந்து சென்ற அதிருப்தியாளர்கள் மீண்டும் அந்தக் கட்சியில் இணைந்தனர்.

கர்நாடக மாநிலம் மைசூரில் நடந்த அந்தக் கட்சியின் 2 நாள்கள் மாநாட்டில் அவர்கள் கலந்து கொண்டனர்.

(ஒ-6)

## நில நடுக்கத்தால் அணையில் விரிசல்

இந்தியாவில் கேரளா மாநிலம் இடுக்கியில் நேற்று இரண்டாவது நாளாக நில நடுக்கம் ஏற்பட்டதில் முல்லைப் பெரியார் அணையில் பல இடங்களில் விரிசல்கள் தோன்றியுள்ளதாகக் கூறப்படுகிறது.

நீர்ப்பாசனத்துறை பொறியியலாளர்கள் அணையின் நிலை குறித்து ஆராய்ந்து வருகிறார்கள். (ஒ-6)

## ரத்து

தென் கொரியாவில் கடுமையான பனிமழை பெய்வதால் சியோல் விமான நிலையத்தில் விமான சேவைகள் ரத்தாகியுள்ளன

ஜப்பானிலும் பனிப் புயலால் ரயில் மற்றும் விமான சேவைகள் கடுமையாகப் பாதிப்படைந்துள்ளன.

(ஒ-6)

## அமெரிக்க நாடாளுமன்றம் அறிவிப்பு

வாஷிங்டன், ஜன. 10

அமெரிக்காவின் அடுத்த அதிபராக ஜோர்ஜ் டபிள்யூ புஷ் நாடாளுமன்றத்தால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டார்

537 தேர்தல் மன்றப் பிரதிநிதிகளில் 271 பேர் புஷ் ஆதரவு தெரிவித்ததை அடுத்து அவரை அதிபராக அமெரிக்க நாடாளுமன்றம் அறிவித்தது

புஷ்ஷை எதிர்த்து போட்டியிட்ட அல்கோர் 266 ஆதரவு வாக்குகளைப் பெற்றது குறிப்பிடத்தக்கது (ஒ-6)

## ஜார்கண்டில் 6 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை

ராஞ்சி, ஜன 10

இந்தியாவின் ஜார்கண்ட் மாநிலத்தில் மக்கள் யுத்தப படை என்ற தடை செய்யப் பட்ட தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்களுக்கும் சிறப்புக் காவல் படையினருக்கும் இடையே இடம் பெற்ற மோதலில் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

இறந்தவர்களில் 6 தீவிரவாதிகளும், ஒரு காவல் படை வீரரும் அடங்குவார்கள்.

(ஒ-6)

# சமாதானத் தீர்வு குறித்து எகுட்பராக் அவநம்பிக்கை

## அமெரிக்காவிடம் தெரிவித்தார்

டெல்அவிவ், ஜன. 10

அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் பதவி விலகுவதற்குள் மேற்காசியப் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காணும் தனது நம்பிக்கை குறைந்து வருவதாக இஸ்ரேலிய இடைக்காலப் பிரதமர் எகுட்பராக் தெரிவித்துள்ளார்.

அவர் ஜெருசலேமில் தங்கியிருந்த போது அமெரிக்க அரசிடம் தனது நம்பிக்கையீனத்தை எடுத்துக் கூறியுள்ளதாகக் கூறப்படுகிறது.

மேற்குக் கரையிலும்காஸாவிலும் இடம்பெற்று வரும் மோதல்களைத் தடுப்பது தொடர்பாக எகிப்தியத் தலைநகர் கெய்ரோவில் நடந்த இஸ்ரேலிய, பலஸ்தீனப் பாதுகாப்பு அதிகாரி



களிடையேயான பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்திருந்தது.

இதனை அமெரிக்க அரசுக்கு சுட்டிக் காட்டிய பராக் மேற்காசிய பாதுகாப்பு விடயத்தில் ஸ்திரமற்ற தன்மையே அதிகம் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை—

புனித நகரான ஜெருசலேமில் பலஸ்தீனர்களின் ஆதிக்கம் அதிகரிக்கக் கூடிய எந்தவொரு தீர்வையும் பிரதமர் பராக் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்பதனை வலியுறுத்தி ஆயிரக் கணக்கான இஸ்ரேலியர்கள் ஜெருசலேமில் ஒன்று கூடி ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

ஜெருசலேமின் அதிகாரம் தொடர்பான பிரச்சினை சமாதானத் தீர்வு காண்பதற்கு முட்டுக் கட்டையாக உள்ள தருணத்தில் இஸ்ரேலியர்களின் இந்த ஆர்ப்பாட்டம் மேற்காசியாவில் அமைதி இப்போது ஏற்படப் போவதில்லை என்பதனை உறுதி செய்வதாகக் கருதப் படுகிறது. (ஒ-6)

# மியான்மர் மற்றும் பங்களாதேஷ் இடையே யுத்தம் மூளும் அபாயம்!

டாக்கா, ஜன. 10

மியான்மருக்கும், பங்களாதேஷுக்கும் பொதுவான நதி ஒன்றில் அணைக்கட்டு அமைப்பது குறித்த பேச்சு வார்த்தை தோல்வியடைந்ததையடுத்து இரு நாடுகளும் எல்லைப் பகுதிகளில் தத்தமது இராணுவங்களைக் குவித்து வருகின்றன.

பங்களாதேஷையும், மியான்மரையும் பிரிக்கும் 'நர்வ்' நதியில் அணைக்கட்டு ஒன்றைக் கட்டுவதற்கு மியான்மர் அரசு நடவடிக்கை எடுத்தது இதற்கு பங்களாதேஷ் அரசு கடும் எதிர்ப்புத் தெரிவித்தது.

அணை கட்டப்பட்டால் கிடைக்கும் நதி நீரில் தடை ஏற்படும் என்பதாலேயே பங்களாதேஷ் எதிர்த்தது.

இந்தப் பிரச்சினை தொடர்பாக இரு நாடுகளிடையே இடம்பெற்ற பேச்சு வார்த்தை தீர்வு எதுவும் எட்டப்படாமல் தோல்வியில் முடிவடைந்தது.

இதனையடுத்து மியான்மர் அரசு தனது இராணுவத்தினரை எல்லைப் பகுதியில் குவித்து வருகிறது. பங்களாதேஷும் தனது படைகளை எல்லைக்கு நகர்த்தியுள்ளது.

நர்வ் நதியில் அணைகட்டுவது தொடர்பான பிரச்சினையால் இந்த இரு நாடுகளும் 1967 ஆம் ஆண்டு யுத்தம் நடத்தியது குறிப்பிடத்தக்கது.

## நாளை

மார்கழி 27

வியாழக்கிழமை

திதி: துதியை

முன் இரவு 10.27 வரை.

நட்சத்திரம்: பூசம்

பிற்பகல் 2.07 வரை.

சுபநேரம்: 8.03 — 9.33

ராகுகாலம் 2.03 — 3.33

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

பத்து வலிமையான மனிதர்களை விட தன்னிச்சையாகச் செயல்படுபவனே மேலானவன்.

# கடந்த வருடம் உலகநாடுகளில் 24 செய்தியாளர்கள் உயிரிழப்பு!

நியூயோர்க், ஜன 10

கடந்த ஆண்டில் உலக நாடுகளில் நிமலராஜன் உட்பட 24 செய்தியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

செய்தியாளர்கள் பாதுகாப்பு ஆணைக்குழு வெளியிட்ட அறிக்கையிலேயே இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறந்த செய்தியாளர்களில் வெகுசிலரே யுத்தங்கள் நடைபெறும்போது இடையில் சிக்கி தற்செயலாக மரணமடைந்துள்ளனர்.

பெரும்பாலான செய்தியாளர்கள் அவர்களது செய்தி அறிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்களால் திட்டமிட்டு கொல்லப்பட்டுள்ளனர்.

இவ்வாறு ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு கொல்லப்பட்ட செய்தியாளர்கள் வரிசையில் மறைந்த யாழ்ப்பாணத்துச் செய்தியாளர் மயில்வாகனம் நிமலராஜனின் பெயரும் ஆணைக்குழுவால் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஒ-6)

## ஹிலாரி கிளின்ரன் பதவிப் பிரமாணம்

வாஷிங்ரன், ஜன. 10

அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனின் மனைவியான ஹிலாரி கிளின்ரன் செனட்டராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

ஹிலாரிக்கு 100 உறுப்பினர்களைக் கொண்ட அமெரிக்க செனட்சபையின் தலைவரான உப-ஜனாதிபதி அல்கோர் பதவிப் பிரமாணம் செய்துவைத்தார்.

# அறிவித்தல்

## மீனவருக்கான கொடுப்பனவு ரூபா 1,500

வடமராட்சி கிழக்கு உ. அ. அதிபர் பிரிவிலுள்ள J/423 தொடக்கம் J/433 வரையான கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்து இடம்பெயர்ந்து தொழில் வாய்ப்பை இழந்த கொடுப்பனவைப்பெற பட்டியலில் கையொப்பமிட்ட 490 மீனவர் குடும்பங்களுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவு ரூபா 1500 நாளை 11.01.2001 வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு தும்பளையில் அமைந்துள்ள வடமராட்சி கிழக்கு உ. அ. அதிபர் பணிமனையில் பருத்தித்துறை மக்கள் வங்கி உத்தியோகத்தர்களால் வழங்கப்படவுள்ளது.

உரியவர்கள் தங்கள் அடையாள அட்டைகள், உலர் உணவு அட்டை ஆகியவற்றுடன் வருகை தந்து கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

வி. ப. வேலாயுதம்பிள்ளை
உ. அ. அதிபர்,
வடமராட்சி கிழக்கு.

தும்பளை.
பருத்தித்துறை,

விளம்பர அன்பளிப்பு,
வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம்
மருதங்கேணி.

உபயகதிர்காமம்.
புலோலி. (82762)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

★★★★★★★★★★★★★★

வலி. தென்மேற்குப் பிரதேச அபிவிருத்திக்கு பல்வேறு வழிகளிலும் சேவை புரிந்து எமக்கு வேலை வாய்ப்புக் கிடைக்க உறுதுணை வழங்கிய

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளரும், வடக்கு அபிவிருத்திப் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கின் தமிழ் விவகார இந்து கலாசார அமைச்சருமாகிய

**கௌரவ கே. என். டக்ளஸ் தேவானந்தா**

மற்றும்

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்

**திரு. வி. கே. குகேந்திரன் [ஜெகன்]**

மற்றும்

வலி. தென்மேற்குப் பிரதேச சபைத் தலைவரும், ஈ. பி. டி. பி. அமைப்பாளருமான

**திரு. வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன்**

ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் எமது பிரதேசத்தின் முழுமையான அபிவிருத்திக்கு அர்ப்பணிப்புடன் உங்கள் சேவையை வழங்குவீர்கள் என ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கின்றோம்.

சமுர்த்தி அபிவிருத்தி
உத்தியோகத்தர்கள்
சண்டிலிப்பாய்.

(82754)

## மண்டைதீவில் நடமாடும் சேவை

வேலணை, ஜன. 10

மண்டைதீவுப் பிரதேச வாழ் பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கேட்டறிந்து அவற்றினைத் தீர்க்கும் முகமாக வேலணை பிரதேசசபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட மண்டைதீவுப் பகுதிக்கான நடமாடும் சேவை இன்று புதன்கிழமை காலை 9 30 மணி முதல் மண்டைதீவு உப பணிமனையில் நடைபெற ஏற்பாடாகியுள்ளதாக பிரதேச சபைத் தலைவர் ந. கருணாகரமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இந் நிகழ்வில் அப்பகுதிப் பொதுமக்கள் அனைவரும் கலந்து தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தெரியப்படுத்துவதோடு மண்டைதீவுப் பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திப் பணிகள் தொடர்பான விவரங்களையும் அறியத் தருமாறு பிரதேச சபைத் தலைவர் கேட்டுள்ளார்.

அன்றைய தினம் அப்பகுதியில் முன்பள்ளி ஒன்றும் ஆரம்பித்து வைக்கப்படவிருப்பதாகவும் மேலும் அவர் தெரிவித்தார். (ஐ-167)

## கலந்துரையாடல்

நெல்லியடி, ஜன. 10

தென்மராட்சிப் பகுதியில் உள்ள சுகாதாரத் தொண்டர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் எதிர்வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு மந்திகையிலுள்ள மடத்தடி பாலர் பாடசாலையில் நடைபெறும்.

இக் கலந்துரையாடலுக்கு சமுகம் கொடுக்கும் சுகாதாரத் தொண்டர்கள் நிரந்தர நியமனத்தின் பொருட்டு ஏற்கனவே வழங்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து கொண்டு வருமாறு தென்மராட்சி சுகாதாரத் தொண்டர் சங்கத் தலைவர் க. ரவீந்திரன் தெரிவித்துள்ளார். (ஐ-109)

## நூலகம் அமைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 10

ஹேமலதா செலவராஜா குழந்தைகள் ஞாபகார்த்த நிதியம் நவாலியில் பொது நூலகம் ஒன்றினை விரைவில் ஆரம்பிக்கவுள்ளது.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் சிறுவர்களின் கல்வியை ஊக்குவிக்கவும், அவர்களை கல்வியில் ஈடுபடுத்தவுமே மேற்படி நூலகம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கான கட்டடம் ஒன்றும் நவாலி வடக்கிலுள்ள புலவர் வீதியில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. (ம — 185)

# வாழ்த்துகின்றோம்

நெடுந்தீவு
சைவப்பிரகாச வித்தியாலயத்தின் அதிபராக

**திருவாளர் ச. சத்தியவரதன்**

அவர்கள் நியமனம் பெற்றதையிட்டு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திரு. திருமதி இ. கிருபாகரன்
குடும்பத்தினர்.

நெடுந்திவு,
வட்டாரம் 5. (82625)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில்
17 — 03 — 1919



இறைவன் அடியில்
11 — 12 — 2000

## அமரர் தில்லையம்பலம் ஆறுமுகம்

(அருளம்பலம்) (காரைநகர் கார்ச்சாரதி)

மாதம் ஒன்று மறைந்தது நீங்கவில்லை எம்துயர்.
பாசத்தின் உறைவிடமே எங்களை வழி நடத்திய அன்புத் தெய்வமே!
உங்கள் உறவுகள் உள்ளம் கலங்கி நிற்கின்றன. அப்பா என்றென்றும் உங்கள் நினைவுகள் எம்மை விட்டு நீங்காது!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

'இரத்தின பவனம்'
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை. (82763)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்

பாடசாலைகளுக்கிடையிலான

## விஞ்ஞான கண்காட்சிப் போட்டி ஆரம்ப நிகழ்வும் க. பொ. த. உயர்தர அறிவு வளர்த்தல் நூல் வெளியீடும்

தலைவர்: வைத்திய கலாநிதி ந. சிவராசா
(தேர்வுத் தலைவரும், விஞ்ஞானப் போட்டி நிகழ்வுகளின் தலைவரும்)

பிரதம விருந்தினர்: உயர்திரு. அ. சிறிகுமரன்
(அதிபர், யாழ். இந்துக் கல்லூரி)

இடம்: யா/ யாழ். இந்துக்கல்லூரி
திகதி: 11 ஜனவரி 2001
நேரம்: முற்பகல் 9.00 (பு. நே.)

நிகழ்ச்சி நிரல்

மு. ப. 9.00 மங்கள விளக்கேற்றல்
வரவேற்புரை: வைத்திய கலாநிதி ந. சிவராசா

மு. ப. 9.10 விஞ்ஞான சங்கத் தலைவர் உரை-
வாழ்நாள் பேராசிரியர் க. பாலசுப்பிரமணியம்

மு. ப. 9.20 க.பொ.த.உயர்தர அறிவுவளர்த்தல் நூல் வெளியீட்டு வைபவம்-
பிரதம விருந்தினர்
பிரதம விருந்தினர் உரை-
உயர்திரு. அ. சிறிகுமரன்
(அதிபர், யாழ். இந்துக் கல்லூரி)

மு. ப. 9.30 நன்றியுரை- உதவி பொதுச் செயலாளர்

மு. ப. 9.35 விஞ்ஞானகண்காட்சியை ஆரம்பித்து வைத்தல்- பிரதம விருந்தினர்

விஞ்ஞான கண்காட்சி 11 ஆம் 12 ஆம் 13 ஆம் திகதி ஜனவரி 2001 ஆகிய மூன்று தினங்களும் நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உதவி பொதுச்செயலாளர்
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்.

(82752)

உ

# பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் மார்கழி மாதம் 27 ஆம் நாள் நாளை (11-01-2001) வியாழக்கிழமை முற்பகல் 11.00மணி முதல் 12.30 மணி வரையுள்ள மீன லக்கின சுபவேளையில்

எமது புத்திரி திருநிறை செல்வி

**மஜிந்தினி**

அவர்களுக்கு சட்டநாதர் வீதி, நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் பூப்புனித நீராட்டுவிழா நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்து வைபவத்தை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மு.குறிப்பு:— இடப்பெயர்வினால் தனித்தனி அழைப்புத்தர முடியவில்லை. தயவு செய்து இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அனைவரும் பங்குகொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்போடு வேண்டுகின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:
திரு. திருமதி சிவானந்தம்

தற்காலிக முகவரி:
195B, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

நிரந்தர முகவரி:
நாவற்குழி, கைதடி,

(சி/14718)

# வடமராட்சிப் பாடசாலைகளின் 14 வயதுப் பிரிவுக்குரிய அணிகளின் உதைபந்தாட்ட இறுதிப் போட்டி இன்று

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் புத்தாயிரமாண்டு உதைபந்தாட்ட மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் வடமராட்சிப் பாடசாலைகளின் 14 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

விசேட திட்டத்தின் கீழ் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கினால் தெரிவு செய்யப்பட்ட 18 பேருக்கு லீக் பயிற்சியாளர்களுக்கான விசேட பயிற்சியை வழங்கியது. பயிற்சி பெற்ற 18பேரும் வடமராட்சி கல்வித் திணைக்களத்தின் ஊடாக 18 பாடசாலைகளில் பயிற்றுநர்களாக நியமிக்கப்பட்டனர்.

தொண்டு அடிப்படையில் இவர்கள் தினமும் காலை, மாலைகளில் 14 வயதுப் பிரிவினருக்கு பயிற்சிகளை வழங்கினர். ஏனைய பிரிவினருக்கும் இவர்களால் பயிற்சி வழங்கப்பட்டது.

சில வசதியான பாடசாலைகள் இந்துப் பயிற்றுநர்களுக்கு சேவைக் கட்டணம் மூலமும், பழைய மாணவர் சங்கம் மூலமும் ஊக்குவிப்புப் படிகளை வழங்கி வருகின்றன.

இந்தத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற 18 பாடசாலைகளும் சம தரத்தில் தமது திறமைகளை வெளிக்காட்டின. இந்தச் சுற்றுப் போட்டி மூலம் அவர்களது திறமைகளை மதிப்பிடக் கூடியதாகவிருந்தது. அனைத்துப் போட்டிகளும் மிகவும் தரமானதாகவும், ரசிகர்களின் மனங்களைக் கவர்வனவாகவும் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இன்று தேவரையாளி இந்துக் கல்லூரியும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியும் மோதுகின்றன.

இரு அணிகளின் பயிற்றுநர்களும் ஒரே கழகத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதால் இரு அணிகளும் பெரும்பாலும் ஒரே விதமான நுட்பங்களையுப் திறமைகளையும் கொண்டுள்ளன.

பலம், பலவீனம் என்பன இரு அணிகளுக்கும் ஒரே வகையில் காணப்படுவதால் யார் வெற்றி பெறுவார்கள் என்பதை இறுதி நேரம் வரை கணிப்பிட முடியாது என்று ரசிகர்கள் கூறுகின்றனர்.

பலம் வாய்ந்த இரு அணிகள் மோதும் இன்றைய ஆட்டம் ரசிகர்களுக்குப் பெருவிருந்தாக அமையப் போகின்றது என்பது உண்மை.

உதைபந்தாட்டத்தின் தரத்தை அபிவிருத்தி செய்யும் தனது திட்டத்தில் கணிசமான வெற்றியைக் கண்டு வரும் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அடுத்து வரும் காலங்களில் மேலும் வெற்றிகளை எட்டும் என நம்பிக்கை கொண்டு லீக் செயற்படுவதாக லீக்கின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-3)


உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் அணி


தேவரையாளி இந்து அணி

## செம்மணிப் புதைகுழி வழக்கை இங்கு மாற்றக் கோரிக்கை

கொழும்பு,ஜன.10

செம்மணிப் புதைகுழி தொடர்பான வழக்கை யாழ்.நீதிவான் நீதிமன்றத்துக்கு மாற்ற வேண்டும் என்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அ.விநாயகமூர்த்தி சட்டமா அதிபரைக் கேட்டுள்ளார்.

சட்டமா அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கடந்த வருடம் செம்மணிப் பகுதியில் புதைகுழிகள் தோண்டப்பட்ட சமயம் 15 சடலங்கள் மீட்கப்பட்டன. அவற்றில் ஐந்து சடலங்கள் மட்டுமே அடையாளம் காணப்பட்டிருந்தன. இந்த விவகாரம் தொடர்பாக சில படை அதிகாரிகள் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிவான் நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். அந்தப் படை அதிகாரிகளின் கோரிக்கையின் பேரில் அந்த வழக்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் சாட்சிகள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் சாட்சியம் அளிக்க கொழும்புக்கு வர முடியாத காரணத்தால் இந்த வழக்கை மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு மாற்ற வேண்டும் - என்றுள்ளது. (ஐ-3)

## தொழிற்சங்க கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.10

யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் இடம்பெறும் மக்கள் எழுச்சி நிகழ்வு தொடர்பாக வடபிரதேச தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் பல்கலைக்கழக சமூகத்தினருக்கும் இடையிலான சந்திப்பு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

வடபிரதேச தொழிற்சங்கங்களின் நிர்வாகிகள் தமது தொழிற் சங்கப் பிரதிநிதிகளை இக்கலந்துரையாடலுக்கு அனுப்பிவைக்குமாறு பல்கலைக்கழக ஊழியர் சங்கம் கோரியுள்ளது. (ஐ-5)

## ஊக்குவிப்பு ஓய்வூதியத் திட்டம் செயற்படுத்த அரசாங்கம் முயற்சி

கொழும்பு,ஜன.10

அரசாங்கத்துறையில் ஆள் குறைப்புச் செய்வதற்காக அரச ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் ஒன்றை அரசாங்கம் விரைவில் அமுல் செய்ய இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி 55 வயதுக்குக் குறைந்த ஆனால் 15 வருடங்களுக்குக் குறையாத சேவை புரிந்த ஊழியர்கள் விரும்பினால் முன்கூட்டியே ஓய்வுபெறலாம். அவர்களுக்கு இரண்டு வருட சம்பளம் ஊக்குவிப்புக் கொடுப்பனவாக வழங்கப்படும்.

இதற்கான சுற்றறிக்கை ஒன்று விரைவில் பொது நிர்வாக அமைச்சால் வெளியிடப்பட இருக்கிறது. (ம)

## பஸ்தரிப்பிடம் அமைப்பு

சண்டிலிப்பாய்,ஜன.10

பண்டத்தரிப்பு - சண்டிலிப்பாய் பிரதான வீதியில் முல்லையடி ஞானவைரவர் ஆலயத்துக்குப் பக்கத்தில் பஸ் பிரயாணிகள் தரிப்பிடம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. தனியார் ஒருவர் இப்பகுதிப் பஸ் பிரயாணிகளின் நலன் கருதி இக்கட்டடத்தை நிறுவியுள்ளார். (ஐ-135)


## சக்தி F.M. அனுசரணையுடன்

சக்தி FM

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் இடைநிலை விஞ்ஞானக் கழகம் நடத்தும்**

**கற்றல் சாதன உற்பத்திப் போட்டியும் வினாடி வினாப் போட்டியும்**

## எதிர்வரும் தைப்பொங்கல் திருநாளில்

### விஞ்ஞானக் கண்காட்சிப் போட்டியும் பாடசாலைக் குழுக்கான வினாடி வினாப் போட்டியும்

மிகத் தரமான பரிசில்களுடன் கூடிய போட்டி நிகழ்ச்சிகள் (பங்குபற்றும் சகலருக்கும் தகுதியான பரிசில்கள் உண்டு)
விரும்பிய யாவரும் பங்கு பெறலாம்.

காலம் :- 14.01.2001
இடம் :- கல்லூரியின் ஜேம்ஸ் லிஞ்ச் மண்டபம்

**விஞ்ஞானக் கண்காட்சிக்கான போட்டிக்கான பிரிவுகள்**

பிரிவு 1 ஆண்டு 6-8 வரை
பிரிவு 2 ஆண்டு 9-11 வரை
பிரிவு 3 ஆசிரியர்களுக்கானது
பிரிவு 4 திறந்த போட்டி

**நிபந்தனைகளும் நோக்கங்களும்**

*பிரிவு 1:-* ஆண்டு 6,7,8, சுற்றாடல் கல்வியும் விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் பாடத்திட்டத்துக்கு அமைய மாணவர் மேற்கொள்ளக் கூடிய கல்வி மேம்பாட்டு அமைப்புக்களில் ஒன்றாக அமைதல் வேண்டும்

*பிரிவு2 :-* ஆண்டு 9,10,11 விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் பாடத்திட்டத்திற்குரிய மேம்பாட்டு அமைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்யலாம்.

*இரு பிரிவுகளுக்கும்* ☛ மாதிரி உருவங்கள் ☛ செய்து காட்டல் அமைப்புக்கள்
போன்ற ஆக்கங்கள் விரும்பப்படுகின்றன.

*பிரிவு 3:-* விஞ்ஞானம் தொடர்பான கற்பித்தல் சாதனம் தயாரிக்கக் கூடிய ஆசிரியர்கள் யாவரும் பங்கு பெறலாம்.

*பிரிவு 4 :-* ஆண்டு 6 தொடக்கம் 11வரை பயன்படுத்தக் கூடிய கற்பித்தல் சாதனம் ஒன்றை ஆர்வம் உள்ள யாவரும் வடிவமைக்கலாம்.

*அனைத்து ஆக்கங்களும் -*
13.01.2001 *அன்று யாழ்.மத்திய கல்லூரி விஞ்ஞான ஆய்வு கூடத்தில் அமைந்துள்ள விசேட அலுவலகத்தில் பிற்பகல் 2.00 மணிக்கு ஒப்படைக்கப்படவேண்டும்.*
*வினாடி வினா போட்டி பற்றிய விவரங்களைக் கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம்.*

*மேலும் விவரங்கள் தேவைப்படின் -*
"விஞ்ஞான உபகரண ஆக்கப் போட்டி"
யாழ்.மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்.
என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல.2184

இடைநிலை விஞ்ஞானக் கழகம்,
யாழ்.மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(c/14776)

# இலங்கை மின்சார சபை
## யாழ்.பிரதேசம்

## மின்தடை பற்றிய அறிவித்தல்

சுன்னாகம் மின் நிலையத்தில் அவசர திருத்த வேலைகள் செய்ய வேண்டியிருப்பதனால் 2001.01.12 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 5.00 மணி வரை காங்கேசன்துறை வீதிப் பகுதி, வட்டுக்கோட்டைப் பகுதி, மானிப்பாய், நவாலி, கொக்குவில், ஆனைக்கோட்டை சுன்னாகம், மல்லாகம் ஆகிய பகுதிகளுக்கான மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். சுன்னாகம் மின்நிலையத்தில் திருத்த வேலைகள் பூர்த்தியடைந்தவுடன் குறிக்கப்பட்ட நேரத்திற்கு முன்னதாக மின் வழங்கப்படும் என்பதையும் பாவனையாளர் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

இதன் காரணமாக மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் சிரமங்களுக்காக மனம் வருந்துகின்றேன்.

பிரதேச மின்பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை,
யாழ்.பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்குக் கைகொடுக்கும்"

**இலங்கை மின்சார சபை**

(C/147705)

# ஈர விழிகளுடன் நெஞ்சம் நெகிழும் முதலாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 24 - 08 - 1949

உதிர்வு 23 - 12 - 1999

அமரர்
**வைரமுத்து இரத்தினசிங்கம்**
**(வாணம்)**
(காங். சீ. கூ. ஊழியர்)

திதி: பிரதமை 10.01.2001

என் இதயக் கோயிலின் இதயதீபம் அணைந்து
ஆண்டு ஒன்று ஆனதுவோ?
நேற்றுப்போல் இருக்குதையா உங்கள் அன்புத்திருமுகம்
பார்த்து
இன்னும் பலகாலம் என்னுடன் சேர்ந்திருப்பீர்கள்
என்று எண்ணியிருந்தேனே ஐயா!
பாவி என்னைத் தவிக்கவிட்டு பறந்து தான் சென்றீர்களோ?
படைத்தவனுக்குமா பொறுக்கவில்லை
பறித்துவிட்டானே உங்களை என்னிடமிருந்து
சென்ற இடத்தால் நீங்கள் வரும் வரைக்கும் வழிமேல்
விழிவைத்துக் காத்திருப்பேனே ஐயா!
இன்று ஒரு வருடமாய் நீங்கள் வரும் வழியை
தினமும் பார்க்கிறேன் ஐயா! திரும்பிவர வழி தெரியாத
இடத்துக்குச் சென்று விட்டீர்களா ஐயா!
பார்க்கும் இடமெல்லாம் உங்கள் அன்புத் திருமுகம்தான்
என்கண்ணில் நிழலாடுகின்றது ஐயா!
எல்லோருடனும் கலகலப்பாகப் பழகும்
வண்ணமுகம் எங்கே ஐயா! வாய் நிறைந்த சிரிப்பு
எங்கே ஐயா!
வாழ்நாள் முழுவதும் என்னைக் கண்ணீரில்
நனையவிட்டுச் சென்று விட்டீர்களே ஐயா!
உயிர் உள்ள வரை என்துயரம் ஆறாது ஐயா!
மார்கழித் திருவாதிரை நன்னாளில் பரமன் பாதம்
பற்றினீர்கள் ஐயா!

உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகிறோம்.

என்றும் உங்கள் நினைவில் வாடும்
**மனைவி, சகோதரர்கள்.**

தற்காலிக முகவரி:-
*உடபதபாலக வளவு,*
*கட்டுடை, மானிப்பாய்.*

நிரந்தர முகவரி:-
*கொல்லங்கலட்டி,*
*தெல்லிப்பழை.*

(82635)

## விளையாட்டு உபகரணங்கள் பொருத்தப்படும்

வலி, வடக்கு, ஜன.10

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க வளவினுள் சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வர்த்தக சங்கத்தின் உதவியுடன் பொருத்தப்படவுள்ளன.

சிறுவர்கள் விளையாடுவதற்கு வேண்டிய ஊஞ்சல்கள் 'சீசோ' போன்ற உபகரணங்களே நிர்மாணிக்கப்படவுள்ளன.

பொங்கல் தினத்தன்று உரிய உபகரணங்கள் பொருத்தப்பட்டு சிறுவர்கள் விளையாடுவதற்கு வசதி செய்யப்படவுள்ளது.


**FABRIC PAINTING**

துணி அலங்காரமிடல்
பயிற்சிக்கான புதிய பிரிவு
15-01-2001
திங்கள் ஆரம்பம்

**தாரிகை**

செங்குந்தா வீதி,
கல்வியங்காடு.

(82...)

**A/L மாணவர்களுக்கு**


**A/L** மாணவர்களுக்கான
பொதுஅறிவும் பொதுவிவேகமும்
விற்பனையாகிக்
கொண்டிருக்கின்றது.

ஆக்கம்:-
**பா.கிருபாகரன்**
[Sp. Trd., Maths, B.A.]

**கிடைக்குமிடம்:-**
பூபாலசிங்கம் புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.

(82698)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## அமரர் இ.ஜோசப் பாலசிங்கம்

மலர்வு 26-07-1956

உதிர்வு 11-12-2000

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"


இறைபதம் அடைந்த பாலசிங்கத்தின் மறைவுச் செய்தி கேட்டு கனடாவிலும், மல்லாகத்திலும் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிகள், ஒத்தாசைகள் புரிந்து எமது துன்பத்தில் துணைநின்ற அனைத்து உள்ளங்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (10-01-2001) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றிற்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி: **கிளோராமேபிள் (சசி)**
பிள்ளைகள்: **பிறவுண்ஸன்,**
**ஜெபிஸன்** (கனடா)
**ஜேம்ஸ்** குடும்பத்தினரும்,
**சிறிநாதன்** குடும்பத்தினரும்.
(மல்லாகம்)

*குளமங்கால்,*
*மல்லாகம்.*

(82749)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மண்ணுலகில் 09 - 09 - 1932

விண்ணுலகில் 11 - 12 - 2000

## அமரர் வயிரவநாதன் வேலுப்பிள்ளை [J.P]

அன்புகளை அள்ளி வீசி
பண்புகளை வளர்த்துத் தந்த
அருமைத் தெய்வமே! என்றும்
எம் நெஞ்சத்தை விட்டு நீங்காது
உங்கள் நினைவுகள்.

எமது அன்புத் தெய்வம் அமரத்துவம் அடைந்த செய்தியறிந்து எங்கள் துயரில் பங்குபற்றி ஆறுதல் கூறியோருக்கும், தொலைபேசி, கடிதங்கள் மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (10-01-2001) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் வீட்டுக்கிருத்தியத்திலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்
**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*ஆவரங்கால்*
*புத்தூர்.*

(82591)

# NSB பணத்தைச் சேமித்துப் பரிசுகளையும் வெல்லுங்கள்

உங்கள் நம்பும் வங்கி

## தேசிய சேமிப்பு வங்கி



## பரிசுதிய சேமிப்புச் சான்றிதழ் (ரீதிரேகா)

கொழும்பு தேசிய சேமிப்பு வங்கி தலைமைச்செயலகத்தில் 2000 டிசெம்பர் 30 ஆம் திகதி இடம்பெற்ற 22 ஆவது பரிசூதிய சேமிப்புச் சான்றிதழ்களின் சீட்டிழுப்பில் யாழ்ப்பாணம் கிளையில் பரிசு பெற்ற 166 அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

### மூன்றாவது பரிசு தங்க நாணயம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 122 | 03S | 0104 | ஜெ. புஸ்பநாதன் | நல்லூர் |
| 060 | 14B | 0115 | வி. அருணாசலம் | இணுவில் |
| 065 | 10C | 0529 | பி. கஜ்னீபா | இணுவில் |
| 097 | 14E | 0090 | பி. சிவசுப்பிரமணியம் | திருநெல்வேலி |
| 114 | 14F | 0380 | கே. சதீஸ் | சித்தன்கேணி |
| 096 | 14C | 0793 | ஆர். டுசாந்தினி | மாதகல் |

### நான்காம் பரிசு ரூபா 1000/=

| | | | | |
|---|---|---|---|---|
| 049 | 10F | 0372 | டி. எட்வேட் | யாழ்ப்பாணம் |
| 150 | 13N | 0018 | எஸ். ஜெகதீஸ்வரி | கோண்டாவில் |
| 098 | 13P | 0527 | ஏ. கமலராணி | கோண்டாவில் |
| 076 | 14D | 0390 | வி. இராசதுரை | கோண்டாவில் |
| 007 | 090 | 0633 | வி. ரட்ணம் | சாவகச்சேரி |
| 015 | 14B | 0351 | கே. லட்சுமிகாந்தன் | கட்டைப்பிராய் |
| 047 | 14B | 0398 | கே. மனோரஞ்சி | சுழிபுரம் |
| 069 | 10F | 0370 | ரி. தனபாலசிங்கம் | கோண்டாவில் |
| 117 | 15V | 0614 | எஸ். யாதவன் | நாவற்குழி |
| 040 | 13P | 0217 | எஸ் ராகவன் | யாழ்ப்பாணம் |
| 136 | 13G | 0636 | ஆர். குணரட்ணம் | யாழ்ப்பாணம் |
| 117 | 03S | 0524 | எஸ். அகிலா | சித்தன்கேணி |
| 061 | 09A | 0988 | ஆர் விக்கினேஸ்வரா | நீராவியடி |
| 084 | 12S | 0745 | எஸ். மகேந்திரராசா | கோண்டாவில் |
| 052 | 13P | 0661 | பி. தயாபரன் | பண்டத்தரிப்பு |
| 113 | 13N | 0677 | எஸ். ஜீ. சண்முகதாஸ் | புத்தூர் |
| 080 | 12O | 0407 | எஸ். லாவன்யா | அச்சுவேலி |
| 064 | 02R | 0920 | பி. சின்னத்துரை | யாழ்ப்பாணம் |
| 123 | 15Y | 0941 | வை. தர்மகிருஷ்ணன் | கோண்டாவில் |
| 144 | 15Y | 0300 | எஸ். பிறேமாவதி | யாழ்ப்பாணம். |
| 105 | 13N | 0725 | ஏ. அன்னலிங்கம் | சுண்டுக்குளி |
| 122 | 12D | 0074 | ரி. செல்லத்துரை | வட்டுக்கோட்டை |
| 148 | 10C | 0101 | எம். சிந்துஜா | நல்லூர் |
| 020 | 13P | 0452 | ஆர். அந்தோனி | யாழ்ப்பாணம் |
| 090 | 13S | 0721 | ஜீ. நற்குணசிங்கம் | நல்லூர் |
| 142 | 12C | 0819 | எஸ். யோகேஸ்வரன் | காரைநகர் |
| 097 | 14E | 0054 | பி. சிவசுப்பிரமணியம் | திருநெல்வேலி |
| 102 | 02J | 0486 | பி. சறோஜினிதேவி | கோண்டாவில் |
| 118 | 08V | 0251 | எஸ். சோமசேகரன் | கல்வியங்காடு |
| 044 | 14B | 0265 | எம். எம். எல். றோகினி | யாழ்ப்பாணம் |
| 049 | 13P | 0589 | ஏ. பாலச்சந்திரன் | ஆனைப்பந்தி |
| 082 | 13A | 0926 | எஸ். சுபேக்கா | சுன்னாகம் |
| 058 | 10C | 0594 | எஸ். சிவகுமார் | கொக்குவில் |
| 023 | 14B | 0815 | எஸ். தயாபரன் | கந்தர்மடம் |
| 057 | 10F | 0228 | ரி. கருணாமூர்த்தி | யாழ்ப்பாணம் |
| 086 | 12C | 0296 | எஸ். சியாற் | சுண்டுக்குளி |
| 071 | 04E | 0275 | த. ஜானகிஅம்மாள் | கோப்பாய் |
| 008 | 14B | 0834 | எல். கிரிதாகரன் | கோப்பாய் |
| 045 | 10C | 0477 | ஏ. நாகராஜா | வட்டுக்கோட்டை |
| 049 | 10C | 0233 | எம். பழனியப்பன் | நல்லூர் |
| 078 | 13G | 0288 | கே. சிவரூபினி | நீர்வேலி |
| 062 | 12S | 0919 | வி. சங்கரப்பிள்ளை | நெடுந்தீவு |
| 131 | 03S | 0012 | ஜீ. ஏ. இருதயராஜா | குருநகர் |
| 105 | 14F | 0162 | ஜெ. டொன்பொஸ்கோ | கரம்பன் |
| 110 | 15V | 0503 | எல். நிசாந் | யாழ்ப்பாணம் |

### ஐந்தாம் பரிசு ரூபா 500/=

| | | | | |
|---|---|---|---|---|
| 079 | 04E | 0878 | கே. விஸ்வலிங்கம் | மானிப்பாய் |
| 105 | 13N | 0508 | ஏ. அன்னலிங்கம் | சுண்டுக்குளி |
| 080 | 13S | 0448 | கே. ஞானசேகரன் | கோப்பாய் |
| 083 | 15V | 0787 | எஸ். ஜெராட் | யாழ்ப்பாணம் |
| 080 | 09A | 0290 | எம். சுதர்சினி | கைதடி |
| 062 | 14B | 0947 | எஸ். பி. சேவியர் | யாழ்ப்பாணம் |
| 088 | 13N | 0894 | ஏ. இராசையா | நல்லூர் |
| 145 | 13G | 0125 | ஏ. அஜித்கர் | கொடிகாமம் |
| 051 | 10F | 0497 | கே. விஸ்ணுப்பிரியா | இணுவில் |
| 140 | 13G | 0711 | எம். குணபாலா | அரியாலை |
| 093 | 12O | 0873 | ரி. விமலாதேவி | யாழ்ப்பாணம் |
| 011 | 09O | 0368 | பி. பாஸ்கரன் | ஆனைக்கோட்டை |
| 036 | 09X | 0063 | எஸ். தனபாலசிங்கம் | திருநெல்வேலி |
| 023 | 13H | 0651 | எம். அற்புதராசா | உடுப்பிட்டி |
| 113 | 08V | 0035 | கே. சாமினா | அச்சுவேலி |
| 100 | 13P | 0338 | யு. ஜெயதரன் | கோண்டாவில் |
| 085 | 10F | 0211 | வி. சங்கராஜ் | நாவாந்துறை |
| 093 | 13N | 0425 | இ. காயத்திரி | நல்லூர் |
| 101 | 14B | 0083 | ஏ. குணரட்ணம் | யாழ்ப்பாணம் |
| 142 | 13A | 0814 | எஸ். வி. சர்மா | கரவெட்டி |
| 008 | 13O | 0108 | ஆர். சதாசிவம் | அத்தியடி |
| 070 | 04E | 0203 | ஏ. மகேந்திரா | ஈச்சமோட்டை |
| 122 | 12D | 0776 | எஸ். அஜித்குமார் | யாழ்ப்பாணம் |
| 119 | 14E | 0060 | வி. அம்பிகைபாகன் | சுன்னாகம் |
| 089 | 10F | 0545 | ஜெ. எம். ஸ்ரலா | யாழ்ப்பாணம் |
| 094 | 13A | 0319 | என். சிவகுமார் | யாழ்ப்பாணம் |

(C/14706)

| | | | | |
|---|---|---|---|---|
| 143 | 13O | 0381 | ரி. ரெனிசன் | நாவாந்துறை |
| 023 | 12P | 0862 | எஸ். சிவயோகி | யாழ்ப்பாணம் |
| 090 | 14E | 0065 | எஸ். கோகுலசெல்வன் | அச்சுவேலி |
| 077 | 13S | 0167 | பி. மலர்விழி | திருநெல்வேலி |
| 068 | 13S | 0196 | ஆர். மன்மதராஜன் | திருநெல்வேலி |
| 008 | 14B | 0561 | வி. கிரிதாகரன் | கோப்பாய் |
| 040 | 04E | 0268 | எம். சாந்தலூசியா | குருநகர் |
| 072 | 14B | 0848 | எஸ். இரட்ணசிங்கம் | அச்சுவேலி |
| 099 | 15V | 0353 | என். தியாகராஜா | கந்தர்மடம் |
| 143 | 10E | 0696 | ஏ. கிருத்திகா | கோண்டாவில் |
| 054 | 5N | 0830 | வி. செல்வராஜா | சாவகச்சேரி |
| 111 | 13S | 0162 | என். கார்த்திகா | அச்சுவேலி |
| 023 | 09O | 0669 | ரி. பஞ்சலிங்கம் | ஆனைக்கோட்டை |
| 085 | 12S | 0351 | எஸ். சந்திரவதனி | தாவடி |
| 123 | 03S | 0387 | கே. கருணாமூர்த்தி | சாவகச்சேரி |
| 027 | 09X | 0144 | வி. மகாலிங்கம் | நல்லூர் |
| 101 | 12D | 0442 | வி. ஸ்ரீரங்கநாதன் | ஆனைப்பந்தி |
| 097 | 09A | 0967 | கே. சீவரட்ணம் | யாழ்ப்பாணம் |
| 079 | 12C | 0147 | எஸ். சுகன்யா | அச்சுவேலி |
| 082 | 13S | 0787 | வி. மகேந்திரகுமார் | சுண்டுக்குளி |
| 100 | 14B | 0203 | ஏ. குணரட்ணம் | யாழ்ப்பாணம் |
| 002 | 03H | 0122 | ஏ. சிவகிருஸ்ணன் | புத்தூர் |
| 086 | 14E | 0437 | எஸ். சிவரஞ்சினி | வரணி |
| 099 | 12D | 0615 | கே. ஞானசோதிலிங்கம் | யாழ்ப்பாணம் |
| 063 | 14B | 0896 | எஸ். கார்த்தியானி | யாழ்ப்பாணம் |
| 109 | 14F | 0462 | ஏ. ரஞ்சனாமதி | அல்வாய் |
| 100 | 13S | 0341 | பி. ஜசிந்தா | அச்சுவேலி |
| 056 | 04E | 0266 | எஸ். ஜீவாஜினி | சித்தன்கேணி |
| 109 | 14E | 0002 | கே. கயல்விழி | புத்தூர் |
| 039 | 05N | 0335 | பி. மாதவன் | யாழ்ப்பாணம் |
| 055 | 09X | 0387 | ஆர். வசந்தகுமார் | மானிப்பாய் |
| 157 | 07N | 0007 | சீ. மரியசூசை | யாழ்ப்பாணம் |
| 054 | 10F | 0886 | எஸ். சிவராதிகன் | நல்லூர் |
| 091 | 13S | 0576 | ஜெ. வெம்பா | சண்டிலிப்பாய் |
| 118 | 14E | 0868 | வி. அம்பிகைபாகன் | சுன்னாகம் |
| 035 | 13B | 0775 | ரி. கணேசலிங்கம் | கொக்குவில் |

### ஆறாவது பரிசு (பரிசுக்கூப்பன் ரூபா 250/-)

| | | | | |
|---|---|---|---|---|
| 056 | 07N | 0230 | ஜீ. திருச்செல்வம் | தாவடி |
| 125 | 12C | 0358 | ஜெ. சூசைதாசன் | யாழ்ப்பாணம் |
| 112 | 12D | 0016 | ஆர். ரமீலா | வட்டுக்கோட்டை |
| 058 | 07N | 0766 | எம். சுதாமதி | மீசாலை |
| 002 | 13H | 0046 | எஸ். அமுதா | சங்கானை |
| 131 | 15Y | 0212 | வி. மதனிகா | மிருசுவில் |
| 078 | 04E | 0302 | வி. சிவஞானசுந்தரம் | ஏழாலை |
| 086 | 13S | 0994 | என். கிருஸ்ணராசா | கோண்டாவில் |
| 097 | 12C | 0272 | எஸ். கஜீபன் | பண்டத்தரிப்பு |
| 100 | 15V | 0682 | ரி. ராமச்சந்திரன் | ஆனைக்கோட்டை |
| 091 | 15V | 0139 | எஸ். சந்திரசேகரம் | புத்தூர் |
| 103 | 13A | 0564 | கே. இராஜேஸ்வரன் | கோண்டாவில் |
| 061 | 13S | 0139 | ஏ. இராஜ்குமார் | அரியாலை |
| 122 | 13N | 0928 | எஸ். அருண் | குருநகர் |
| 057 | 04E | 0670 | எம். இராசலிங்கம் | உடுவில் |
| 004 | 13D | 0310 | கே. உதயராசா | இணுவில் |
| 001 | 14F | 0678 | ரி. சிவகணேசலிங்கம் | சித்தன்கேணி |
| 161 | 13G | 0306 | சி. கௌதமி | கொழும்புத்துறை |
| 111 | 12D | 0903 | ஆர். றமீலா | வட்டுக்கோட்டை |
| 138 | 13O | 0157 | வி. விஜயரட்ணம் | யாழ்ப்பாணம் |
| 153 | 13B | 0070 | கே. விஜிகுமார் | ஆனைக்கோட்டை |
| 149 | 10E | 0703 | ரி. கண்ணுத்துரை | யாழ்ப்பாணம் |
| 058 | 10C | 0688 | ரி. நடராசா | சுழிபுரம் |
| 059 | 13N | 0173 | ஜீ. இராசையா | நல்லூர் |
| 094 | 09A | 0175 | வி. தவமணி | நல்லூர் |
| 002 | 14F | 0862 | எஸ். பிரசாத் | சித்தன்கேணி |
| 073 | 14E | 0240 | பி. தவராசலிங்கம் | கொக்குவில் |
| 066 | 13N | 0966 | ஏ. மகேஸ்வரன் | நல்லூர் |
| 018 | 09O | 0211 | எஸ். நிகிந்தா | யாழ்ப்பாணம் |
| 073 | 12S | 0285 | எஸ். கலைதாசன் | அச்சுவேலி |
| 042 | 10F | 0569 | எஸ். தேவராஜன் | யாழ்ப்பாணம் |
| 005 | 12S | 0312 | எஸ். சயனுதா | கொக்குவில் |
| 140 | 09N | 0635 | எஸ். சித்திரஞ்சன் | சாவகச்சேரி |
| 027 | 10C | 0667 | எஸ். சுந்தரேசன் | கொக்குவில் |
| 074 | 13P | 0653 | ரி. எம். செல்வமலர் | உரும்பிராய் |
| 131 | 14E | 0048 | வி. ஸ்ரீஸ்கந்தன் | கொக்குவில் |
| 005 | 13H | 0561 | எஸ். பாலசுப்பிரமணியம் | யாழ்ப்பாணம் |
| 030 | 13B | 0705 | எம். கமலதாசன் | வண்ணார்பண்ணை |
| 087 | 13A | 0027 | பி. சிவானந்தசர்மா | புத்தூர் |
| 044 | 04E | 0124 | எஸ். ஜெ. ஜெகராசசிங்கம் | யாழ்ப்பாணம் |
| 125 | 15V | 0639 | கே. ஆதவன் | யாழ்ப்பாணம் |
| 120 | 08V | 0590 | எஸ். அம்பலவாணர் | யாழ்ப்பாணம் |
| 041 | 12S | 0133 | கே. திருநாவுக்கரசு | யாழ்ப்பாணம் |
| 067 | 07N | 0195 | வி. கந்தசாமி | யாழ்ப்பாணம் |
| 105 | 12G | 0162 | வி. நந்தகுமார் | உரும்பிராய் |
| 038 | 10C | 0861 | ரி. பைரவி | நீர்வேலி |
| 077 | 07N | 0417 | சாந்தலக்சுமி | ஆனைக்கோட்டை |
| 121 | 15V | 187 | ஜே. நேசதுரை | சங்கானை |
| 125 | 01V | 0651 | எஸ். முருகநேசன் | சுன்னாகம் |
| 094 | 09A | 0797 | எஸ். வைகுந்தவாசன் | யாழ்ப்பாணம் |
| 137 | 13G | 0348 | ஆர். விஜயவர்மன் | கோண்டாவில் |
| 081 | 09A | 0537 | ஏ. டயானார்த்தி | யாழ்ப்பாணம் |
| 052 | 10C | 0817 | கே. செல்வப்பிரகாசம் | புன்னாலைக்கட்டுவன் |

அடுத்து வரும் சீட்டிழுப்பிலிருந்து பரிசுகள் அதிகரிக்கப்படுகின்றன. எனவே அதிக பரிசுகளை வெல்ல மீண்டும் மீண்டும் ரீதிரேகா சான்றிதழ்களைக் கொள்வனவு செய்யுங்கள்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள தட்டச்சு இயந்திரம் (தமிழ், ஆங்கிலம்) ஜெனரேற்றர் **(Honda 650 W)** உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: து.சிறீதரன், **802/4,** பலாலி வீதி, திருநெல்வேலி. (82747)

**PIONEER** யப்பான் டெக்செற் **[210W], PIONEER** டியிற்றல் ரைமர் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: விஜி, மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (82758)

## இடம் மாற்றம்

நாவலடிச் சந்தி அல்வாய் வடக்கில் இயங்கி வந்த கமலக் கண்ணன் திருமண சேவை தற்சமயம் வியாபாரி மூலைச் சந்தி, வியாபாரி மூலை என்னும் முகவரியில் இயங்கி வருகின்றது. மற்றும் சகல மதத்தவரின் தகுதிகளுக்கேற்ப மணமகன், மணமகள் உண்டு. தொடர்பு: ஆ.செல்வவிநாயகம் **C/o** பொ.மோகன் (காப்புறுதி முகவர்) வியாபாரிமூலைச் சந்தி, வியாபாரிமூலை. (82733)

## புறொயிலர் இறைச்சிக்கோழி

கொழும்பிலிருந்து விமானம் மூலம் தினமும் இறக்குமதி செய்யப்படும். வயிராபாம் இறைச்சிக் கோழி மற்றும் கீல்ஸ் வகை, சொயன்சீயஸ் என்பன சுத்தம்செய்து தினமும் விற்பனைக்கு உண்டு. காலை 6 மணி தொடக்கம் மாலை 7.30 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: **T.**கரன் ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் சந்திக் கடை, யாழ்ப்பாணம். (82756)

## தவறிவிட்டது

89சிறீ 855 இலக்க மோட்டார் சைக்கிள் பதிவுப் பத்திரம் 07.01.2001 அன்று நாவலர் வீதிப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஆரணி மில், இலுப்பையடிச் சந்தி எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (82732)

ஏழாலை தெற்கு, மயிலங்காடு, ஏழாலை எனும் முகவரியுடைய கந்தசாமி சிறிவதனி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 775310197V), விசேட அடையாள அட்டை (இல.0906021430) கல்வியியற் கல்லூரி அடையாள அட்டை என்பன 05.01.2001 அன்று காங்கேசன்துறை துறைமுகத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ரஜனி சலூன், சுன்னாகம் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (82727)

மட்டுவில் வடக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த பிறேமஜெகன் தளிர்ராஜ் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும், விசேட அடையாள அட்டையும் கொக்குவிலுக்கும் ஆனைக்கோட்டைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள்: அ.அமலதாஸ், பிடாரி கோயிலடி, ஆனைக்கோட்டை என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (82751)

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி எனும் முகவரியுடைய நாகராசா தர்சியா என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல.091010439) சங்கரத்தைப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மு.திருநாமம், குளத்தடி, சங்கரத்தை எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (82755)

திருநெல்வேலியைச் சேர்ந்த முனியாண்டி இராசேந்திரன் என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல.0902040728) 02.01.2001 அன்று புனித ஜோண் பொஸ்கோ பாடசாலைப் பகுதியில் (றக்கா வீதி) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வே.முனியாண்டி, இல. 124, சிவன் வீதி, முடமாவடி, திருநெல்வேலி எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (82759)

## இலக்கியக் கட்டுரைகள்

யாழ்சேவையில் 'நல்லதோர் வீணை' நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் இலக்கிய விமர்சன நூல் 10ஆம், 11 ஆம் தரங்களில் தமிழ் இலக்கிய பாடத்தை கற்கவும் கற்பிக்கவும் உதவக்கூடியது. (82757)

## உடன் விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள **HONDA CB 125 T** புதிய சென்ரசொக்கப் சோபர் மொடல் மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 442, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (82762)

## தரம் II

வணிகக் கல்வியும் கணக்கீடும் யாழ்நகரின் பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம். தேசிய கல்வி நிறுவன பாடத்திட்ட விரிவாக்கம். ஆசிரியர்:- இ.இரட்ணம். (82729)

## தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன.10

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சகல கிளைகளினதும் தலைவர், செயலாளர், பொருளாளர், நிர்வாக சபை உறுப்பினர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் எதிர்வரும் சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறும்.

இந்தக் கலந்துரையாடலில் முக்கிய விடயங்கள் ஆராயப்படவுள்ளதால் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் கேட்டுள்ளார். (ஜ-3)

## வர்த்தகர் சங்கப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன.10

மீசாலை, புத்தூர் சந்தி கைத்தொழில் வர்த்தகர் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கான விசேட பொதுக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு கரவெட்டி கிழக்கு, கிழவி தோட்டம் பிள்ளையார் கோயிலடியில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மீசாலை வடக்கு, இராமாவில், அல்லாரை, வேம்பிராய் மற்றும் மந்துவில் பகுதிகளைச் சேர்ந்த வர்த்தக உரிமையாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் தலைவர் இ. இராசரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார். (ஜ-10)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு 17 - 04 - 1927

உதிர்வு 12 - 12 - 2000

காலஞ்சென்ற பொ.நடராசா அவர்களின் பாசமிகு பாரியார்

## திருமதி நடராசா பாக்கியநாயகி

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (10-01-2001) புதன்கிழமை வில்லூன்றியில் நடைபெறும். நாளை (11. 01. 2001) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டுகின்றோம்.

**T.புத்திரசிகாமணி** (மகன்)
**தேவி விஜயலட்சுமி** (மருமகள்) } ஜேர்மனி
பேரப்பிள்ளைகள்
**த.கணநாதன் (குணம்)**

*மாரியம்மன் வீதி,*
*அம்பத்தை, திருநெல்வேலி.*

(82748)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1934 - 04 - 31

மறைவு 2000 - 01 - 22

தெல்லிப்பழை வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கு, காரைக்கால் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

## சின்னத்தம்பி நவரத்தினம் (சாமி)

(ஓய்வுபெற்ற சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்)

திதி: துதியை 10-01-2001

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவு நாளான இன்று (10-01-2001) புதன்கிழமை அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சி.பாலசுந்தரம் (தேவன்)
சி.கமலாதேவி (தேவி)
(சகோதரர்)

*நெசவுசாலை வீதி,*
*வீமன்காமம்,*
*தெல்லிப்பழை.*

(82742)

# 24 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

10-01-2001



செல்வன்

## செல்வராசா மோகனதாஸ்

அளவெட்டி மேற்கைச் சேர்ந்த

**செல்வராசா நாகேஸ்வரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் செல்வன் மோகனதாஸ்**


**தனது 24 ஆவது பிறந்த நாளை இன்று 10-01-2001 லண்டனில் கொண்டாடுகிறார். இவரை அதே இடத்தைச் சேர்ந்த சித்தப்பாமார், பவா அன்ரி மற்றும் நண்பர்கள் அளவெட்டியில் இருக்கும் அப்பா, அம்மா, பெரியக்கா குடும்பத்தினர், சின்னக்கா குடும்பத்தினர், தங்கைமார் மகிந்தா ,பகீர்ந்தா மற்றும் கல்வாரிச் சபையினரும் யேசுவின் கிருபை பெற்று நீடுழி காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.**

**- செ.செல்வராசா, நாகேஸ்வரி.**

*காட்டுப்புலம்,*
*அளவெட்டி மேற்கு.*
*அளவெட்டி.*

(82454)

# நன்றி நவிலல்



## அமரர் கந்தையா இராமநாதன்

(கொறனர்)

(ஓய்வு பெற்ற அதிபரும் மரணவிசாரணை அதிகாரியும் - நெடுந்தீவு)

மண்ணில் 23-02-1913

விண்ணில் 10-12-2000

"இன்பமாம் சுற்றிலே சந்திப்போம் ஜோதி மண்டலத்தில்"

அன்னாரின் இறுதியாத்திரையிலும் 8ஆம், 21ஆம், 31ஆம் நாள் நினைவஞ்சலிகளிலும் பங்குபற்றிய போதகர் ஐயா, குருமார், அருட்சகோதரிகள், இனசன, சுற்றத்தினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் அனுதாபச் செய்திகள் அனுப்பியோர், மலர் வளையங்கள் வைத்தோர், தென்னிந்தியத் திருச்சபையினர், பிரதேச சபையினர், பிரதேச செயலகத்தினர், ப.நோ.கூ சங்கத்தினர், மகாவித்தியாலய அதிபர் மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள், நெடு.கிழக்கு சனசமூகநிலைய நிர்வாகத்தினர் 'அக்குவாட்டிக்' மோட்டார்படகு உரிமையாளர் மற்றும் சந்தர்ப்பம் நோக்கி சாலவும் உதவி புரிந்த யாவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

**- குடும்பத்தினர்.**

*13ஆம் வட்டாரம்,*
*நெடுந்தீவு கிழக்கு,*
*நெடுந்தீவு.*

(82739)

# தமிழ்மக்களை ஆயுதம் ஏந்தத் தூண்டிய தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள்

தமிழர்களுக்கு எதிரான அரச அடக்கு முறைக்கு என்றென்றும் அத்தாட்சியாக விளங்கும் பல நிகழ்வுகளில் 1974 ஜனவரி பத்தாம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை பிரதானமானது.

தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்ற 26 வருடங்களுக்கு முந்திய பின்னணியையும், நிகழ்வுகளையும் தொட்டுக் காட்டுகிறது இக் கட்டுரை.

1997 ஜனவரி 10 ஆம் திகதி உதயனில் வெளியான கட்டுரை மறு பிரகரம் செய்யப்படுகிறது.

இலங்கைக் குடியரசினை நிறுவும் அரசமைப்புச் சட்டம் 1972 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பின்னர் தமிழ்ப் பகுதிகளில் அரசுக்கு எதிரான அரசியல் அலை பெருகியது.

ஆனால தமிழ் மக்களில் கணிசமானோர் தமது அரசமைப்புக்கு ஆதரவாக உள்ளனர் என்று ஐக்கிய முன்னணி அரசு பிரசாரம் செய்தது.

அதனை நிரூபிக்க முடியுமா என்று அரசுக்குச் சவால் விடும் விதத்தில் தந்தை செல்வா தமது காங்கேசன்துறைத் தொகுதி எம். பி. பதவியை 1972 ஒக்ரோபர் 3 ஆம் திகதி இராஜினாமாச் செய்து இடைத்தேர்தலை நடத்தக் கோரினார்.

ஆனால் அரசு இடைத்தேர்தலை நடததாது இழுத்தடித்துக் கொண்டிருந்தது.

இத்தகைய ஒரு கட்டத்திலேயே நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்துவது என்று மலேசியாவில் எடுக்கப்பட்ட தீர்மானத்தைச் செயற்படுத்த அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளை முடிவு செய்தது.

ஆனால் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டைக் கொழும்பில் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில்தானே நடத்தவேண்டும் என மாநாட்டு அமைப்பாளர் மீது அரசு பல்வேறு நிர்ப்பந்தங்களைக் கொடுக்கத் தலைப்பட்டது. ஆயினும் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளை தமிழ் மக்கள் செறிந்து வாழும் யாழ்ப்பாணத்திலேயே மாநாட்டை எதுவிதமும் நடத்தி முடிப்பது என்று உறுதியாகச் செயற்பட ஆரம்பித்தது.

யாழ். மாநகர வரியிறுப்பாளர்களுக்கே சொந்தமான யாழ். நகரமண்டபம், யாழ். திறந்த வெளியரங்கு மற்றும் யாழ்ப்பாணக் கூட்டுறவாளர்களால் நிர்மாணிக்கப்பட்டு இருந்த வீரசிங்கம் மண்டபம் ஆகியவற்றை மாநாட்டுக்கும் பயன்படுத்த அரசு அனுமதி மறுத்தது. அதனால் தனியாருக்குச் சொந்தமான மண்டபங்களை மாற்று ஒழுங்காகப் பயன்படுத்த வேண்டியதாயிற்று.

## நடைபெறாது என்று பிரசாரம்

தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறாது என்று அரசு பிரசாரம் செய்தது.

குறிப்பிட்ட தினங்களில் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் கண்டிப்பாக இடம்பெறும் எனும் தகவல் இலங்கைத் தீவு அடங்கலும் இருந்த திரைப்படமாளிகைகளின் மூலம் அறிவிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்துவெளிநாட்டு அறிஞர்களின் வரவையொட்டி யாழ். நகரைச் சுத்தமாகவும், அலங்காரமாகவும் வைத்திருக்கும்படி மாநகர ஆணையாளர் ஏ. ரி. சுந்தரம் வேண்டுகோள் விடுத்தார். அன்றைய தினமே யாழ். நகர் மட்டுமன்றி யாழ். குடாநாடே கணப்பொழுதில் விழாக் கோலம் காட்டத் தலைப்பட்டது.

இத்தனைக்கும் இடையில் மாநாட்டில் கலந்து கொள்ளும் பொருட்டு வந்திருந்த வெளிநாட்டு நல்லறிஞர் பலர் கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையத்தில் வைத்தே திருப்பி அனுப்பப்பட்டனர். அங்ஙனம் திருப்பி அனுப்பப்பட்டோர் அவரவர் நாடுகளில் செய்தி ஏஜென்சிகளுக்கு அளித்த பேட்டிகள் மாநாட்டுக்கு உலகப் பிரசித்தத்தைத் தேடித் தந்தன.

இத்தகைய தாக்கங்களால் ஏற்பட்ட கெட்ட பெயரை நீக்கும் நிமித்தம், மாநாடு ஆரம்பமாவதற்கு மூன்றே மூன்று தினங்கள் எஞ்சியிருந்த வேளையில் மாநாட்டை நடத்துவதற்குரிய முறையான அனுமதி மாநாட்டு அமைப்பாளர்களுக்கு அரசினால் வழங்கப்பட்டது. அதன் பின்னரே மாநாட்டை நடத்துவதற்கும் கலை நிகழ்ச்சிகளை அரங்கேற்றுவதற்கும் யாழ். வீரசிங்கம் மண்டபம் மற்றும் யாழ். திறந்த வெளியரங்கு என்பனவற்றைப் பயன்படுத்த வசதி கிடைத்தது.

எனினும் மாநாட்டைத் திறந்து வைக்க அரசுத் தலைவரோ அல்லது அவரின் பிரதிநிதியோ யாழ்ப்பாணம் வரவில்லை, பாரிஸில் நடைபெற்ற மாதாடு யுனெஸ்கோ தலைவர் டாக்டர் ஆதிசேசையாவினால் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது போன்றே, யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காம் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடும் அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றத்தின் ஸ்தாபகரும், தமிழ்த் தூதுவருமாகிய வண.பிதா தனிநாயக அடிகளாரால் வைபவ முறைப்படி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் திறந்து வைக்கப்பட்டது.

இலங்கைக் கிளையின் உறுப்பினர்களுள் முற்போக்கு வட்டாரத்தினைச் சேர்ந்த ஆய்வாளர் சிலர் மாநாட்டில்கலந்து கொள்ளாது பகிஷ்கரித்த போதிலும் மாநாடு மக்களின் பேராதரவைப் பெற்று வெகு விமரிசையாகவே நடந்து முடிந்தது.

## வழியனுப்பு விழா

மாநாட்டில் கலந்து கொண்ட வெளிநாட்டு அறிஞர்களுக்கு ஜனவரி பத்தாம் நாளில் வழியனுப்பு விழாவைச் சிறப்புற நடத்துவதற்கு யாழ். திறந்த வெளியரங்கே ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த பொழுதிலும் அதன் வெளிவாயில்கள் அடைக்கப்பட்டு இருந்தன. யாழ். மாநகர முதல்வர் பணித்தாலன்றி அவை திறக்கப்பட மாட்டா என்று அதன் காப்பாளர் தெரிவித்தார். தலைமறைவாகிவிட்ட முதல்வரின் இருப்பிடம் அறியும் அலைச்சல் உரிய பலனைத் தராமையால், வழியனுப்பு விழாவை வீரசிங்கம் மண்டபத்திலேயே நடத்த வேண்டியதாயிற்று.

வழியனுப்பு விழாவிற்கு திரண்டிருந்த பல்லாயிரம் மக்களை அம் மண்டபத்தினுள் உள்ளடக்க இயலாமையால் மண்டபம் முன்பாக ஒரு திடீர் மேடையை அமைத்து வீதியின் மறுபக்கத்தில் பார்வையாளர் அமைதியாக அமர்ந்திருக்க வழியனுப்பு விழா கோலாகலமாக ஆரம்பமாயிற்று.

## அடாவடித்தனம்

மேடைக்கும் பார்வையாளர்களுக்கும் இடையே வெறிதாக இருந்த வீதியூடே போக்குவரவுக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி தமது மோட்டார் சைக்கிளில் கடந்து செல்ல முற்பட்டார். அங்ஙனம் செய்ய வேண்டாம் என்று பார்வையாளர்கள் அவரைக் கேட்டுக் கொண்டனர். அவ்வேண்டுகோளுக்கு இணங்கியவராக, அந்த அதிகாரியும் சுற்று வீதி வழியே யாழ். பழைய ஒல்லாந்தர் கோட்டையை வலம்வந்து, சுற்றுப் பாதையால் பொலிஸ் தலைமைப் பணியகம் சென்றடைந்தார்.

இச் சம்பவத்தைச் சாட்டாகக் கொண்டு வீதிப் போக்குவரவுக்குக் குந்தகம் விளைவித்தாக எடுத்துக் கொண்டு கலகம் அடக்கும் பொலிஸார் அங்கு வந்து தமது அடாவடித்தனத்தைக் கட்டவிழ்த்து விட்டனர்.

பல்லாயிரக் கணக்கில் திரண்டிருந்த அப் பெருங் கூட்டத்தின் மத்தியிலே புகுந்து குண்டாந்தடிப்பிரயோகம், கண்ணீர்க் குண்டு வீச்சு மற்றும் மின்கம்பிகள் மீதான துப்பாக்கிப் பிரயோகம் இத்தனையையும் எவ்வித முன்னெச்சரிக்கையுமின்றிக் கணப்பொழுதில் நிகழ்த்தி முடித்தனர் பொலீஸார். விளைவு தமிழர்கள் ஒன்பது பேர் சம்பவம் நடந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் காயமுற்றனர். பெண்கள் ஆடை குலைந்து அவதிக்குள்ளாகினர்.

இந்திர விழாக்கோலம் காட்டி நின்ற யாழ். நகர் சோகத்தில் ஆழ்ந்தது. 1974 ஆம் ஆண்டு யாழ். குடாநாட்டில் எந்தவொரு தமிழன் வீட்டிலும் பொங்கல் பெருநாளின் போது பால் பொங்கவில்லை. மாறாக தமிழர் உள்ளங்கள் தாம் பொங்கி எழுந்தன.

பொது மக்கள் வரிப்பணத்தில் ஊதியம் பெறும் சட்டத்தினதும் ஒழுங்கினதும் பாதுகாவலர்களால் நிகழ்த்தப்பட்ட இப்படுபாதகச் செயலை விசாரிப்பதற்கு நீதி விசாரணைக்குழு ஒன்றை நியமிக்குமாறு வற்புறுத்தப்பட்ட போதும் அரசு மேற்படி கோரிக்கையைப் புறக்கணித்தது.

## பொது விசாரணை

எனவே, இலங்கையில் ஒரு முதல் எடுத்துக் காட்டாக, முன்னோடியாக யாழ்ப்பாணப் பொது அலுவல்கள் குழு, ஒய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர்கள் இருவரையும், தென் இந்தியத் திருச்சபையின் யாழ். மறைமாவட்ட ஒய்வு பெற்ற பேராயர் சபாபதி குலேந்திரனையும் உள்ளடக்கியதாக மூவர் கொண்ட பொது விசாரணைக்குழுவை நியமித்தது. குழுவுக்கு நீதியரசர் கிறெஸ்ரர் தலைமை வகித்தார், நீதியரசர் எஸ். சி. மாணிக்கவாசகர் குழுவின் உறுப்பினர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பெரியார் வேற்பிள்ளை பொது விசாரணைக் குழுவின் செயலாளராகப் பணியாற்றினார். ஓய்வு பெற்ற மாவட்ட நீதியரசர் தம்பித்துரை அதன் வழக்குத் தொடுநராகச் செயற்பட்டார்.

விசாரணையின் போது பிரசன்னமாக இருக்குமாறு பொலீஸாருக்கு அழைப்பு அனுப்பப்பட்ட போதும் அந்த அழைப்பு ஏற்கப்படவில்லை, விசாரணை அமர்வுகள் யாழ். சுண்டுக்குளி பாம் கோட்டியிலேயே இடம்பெற்றன.

பொது விசாரணை மேற்படி குற்றச் செயல்களுக்குப் பொலீஸாரையே பொறுப்பாக்கியிருந்தது. அதன் அறிக்கை நூலுருவில் வெளியிடப்பட்டது. முன்னாள் மானிப்பாய்/உடுவில் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் வி. தர்மலிங்கம் வெகு நாசுக்காக மேற்படி அறிக்கையை நாடாளுமன்ற நடவடிக்கைகள் பதிவேடாகிய ஹன்சாட்டில் இடம்பெறச் செய்வதில் வெற்றியடைந்தார்.

## நினைவுத் தூண்கள்

மாநாட்டில் பலி கொள்ளப்பட்ட தியாகிகள் ஞாபகார்த்தமாக முதலில் ஒன்பது சிறு தூண்கள் நிறுவப்பட்டன. ஆயினும் இரவோடு இரவாக அவை அப்புறப்படுத்தப்பட்டமையினால், இரண்டாவது ஞாபகார்த்த தினத்தையொட்டி வலுவூட்டப்பட்ட சிமெந்துக் கொங்கிறீற்றினால் பெரும் நினைவுத்தூண் ஒன்று தமிழ் இளைஞர்களால் எழுப்பப்பட்டது. அத் தூணும் விட்டுவைக்கப்படவில்லை. மூன்று துண்டங்களாகத் தகர்க்கப்பட்டிருந்த அச் சிதைவுகள் அதே நிலையில் வணக்கத்துக்கும் மரியாதைக்கும் உரியவையாகப் போற்றிப் பேணப்பட்டு வந்தன.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா தாம் பிரதமராகவும், உள்ளூராட்சி, நிர்மாணத்துறை அமைச்சராகவும் வடபகுதிக்கு வருகை தந்தபோது மேற்படி நினைவுச் சின்னத்தின் சிதைவுகளை அவதானித்து அவ்விடத்தில் பன்னிரு மணிநேர அவகாசத்தில் தற்போது அங்கு காணப்படும் ஒன்பது தூண்களையும் நிறுவப் பணிப்புரை வழங்கியிருந்தார்.

அந்தத் தூண்களே தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளை நினைவுபடுத்தும் எச்சமாகத் தற்போது நிற்கின்றன.

தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்துகொண்ட வெளிநாட்டு அறிஞர்களுக்கு வழியனுப்பு விழா நடத்துவதற்கு அமைக்கப்பட்ட மேடையின் பின்னே இருந்த யாழ். வீரசிங்கம் மண்டபம் இன்று இல்லை. அதன் சிதைவுகளும் ஞாபகச் சின்னமாக மாறிவிட்டமையே இன்றைய நிலை.

இத்தீவில் மித வாதம் தீவிர வாதமாகவும், தீவிர வாதம் ஆயுதப் போராட்டமாகவும் மாறுவதற்கு அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளே வழி வகுத்ததாகச் சாதிக்கின்றனர் அரசியல் ஆய்வாளர்கள்.

- இன்பராசு -

★


## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஊர்காவற்றுறை பருத்தியடைப்பு கரம்பொன் மேற்கு

## தேவன்கணைப் பிள்ளையார் கோயில்

புனரமைப்புக்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் இருந்து ஒரு லட்சம் ரூபாவும் (ரூ1,00,000) பிரதேசசபை பிரமாண அடிப்படை நிதியில் இருந்து ஒரு லட்சம் ரூபாவும் (ரூ1,00,000) வழங்கி உதவிய ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார இந்து கலாசார அமைச்சருமான கௌரவ கே. என். டக்ளஸ் தேவானந்தா அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் எல்லாம் வல்ல விநாயகப்பெருமான் அருளினால் நீடூழி வாழ்ந்து நாட்டுக்கும் மக்களுக்கும் தங்களது சேவையை வழங்குவீர்கள் எனப் பிரார்த்திக்கின்றோம்.

ஆலய பரிபாலன சபையினர்
கரம்பொன் மேற்கு, பருத்தியடைப்பு
ஊர்காவற்றுறை.

(82773)



யாழ். மாவட்டத்தில் வசிக்கும்

## வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்களுக்கான ஒன்றுகூடல்

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் பயின்று தற்சமயம் நியமனத்தை எதிர்பார்த்திருக்கும் ஆசிரியப் பயிலுநர்களுக்கும், ஏற்கனவே நியமனம் பெற்றுக்கொண்ட பயிலுநர்களுக்குமான ஒன்றுகூடல் நிகழ்வொன்று எதிர்வரும் 2001-01-13 ஆம் திகதி 11 மணிக்கு மருதனார்மடத்தில் இயங்கும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

மேற்படி பயிலுநர்களைத் தவறாது சமூகம் தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

S. சிவதாசன்
N. சதீஸ்கரன்,
(ஒழுங்கமைப்பாளர்)

09-01-2001

(82771)

# மரண அறிவித்தல்கள்

## சின்னப்பு இரத்தினசபாபதி
*(சின்னராஜா)*

(முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர், தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்,)

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு இரத்தின சபாபதி நேற்று (9-1-2001) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:-
**இ. கேசவமூர்த்தி**
(மகன்)

போக்காலை வீதி,
உடுப்பிட்டி.
(82784)

## வேலன் ஐயம்பிள்ளை

காரைநகர் சிவகாமி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஐயம்பிள்ளை 05-01-2001 அன்று லண்டனில் காலமானார்

இவர் காலஞ்சென்ற வேலன் – மீனாட்சி தம்பதிகளின் புதல்வரும், காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்புக் கணவரும், தெய்வானை, கனகசபை ஆகியோரின் சகோதரரும், கேசகமூர்த்தி (கனடா), கனகரட்ணம் (ஜேர்மனி), பேரானந்தம் (கனடா), விஜயகுமார்- (ஹொலண்ட்). தவராசா (லண்டன்) ஆகியோரின் பிரியமுள்ள தந்தையும், யோகாம்பிகை, அன்னபாக்கியம், சரோஜினி, நந்தா, மைதிலி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சுஜாதா, ஜெயந்திமாலா, கேதீஸ்வரன், நிசாந்தன், சிவகௌரி, சிவரூபி, திவ்யா, லக்சி, ரதீஸ் ஆகியோரின் அன்புக்குரிய பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மா. தயாளன்.**

காரைநகர்.
(சி/14720)

## ஞானேந்திரன் சாள்ஸ் (விஜயன்)

குருநகரைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட ஞானேந்திரன் சாள்ஸ் (விஜயன்) அவர்கள் நேற்று (09-01-2001) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கிறிஸ்தோபர் ஞானேந்திரன் – ஞுணம் தம்பதிகளின் அருமை மகனும் அல்பிறேற்றம்மாவின் அன்புக் கணவரும் செல்வன் டிக்கன்ஸ் (ஜெகன் - ஸ்ரீலங்கா ரெலிக்கொம்), செல்விகள் டயானா, ஜெனிற்றா, றூபினா, ஆன்வினித்தா ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (10-01-2001) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆனைக்கோட்டை அடைக்கலமாதா ஆலயத்தில் இடம்பெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காகக் காக்கைதீவு சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்,

தகவல்:
**டிக்கன்ஸ் (ஜெகன்)**
(மகன்)

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.
(82778)

## திருமதி யோசப்மேரி யோசப்பின்
(நேசம்மா)

சுண்டிக்குளி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோசப் மேரி யோசப்பின் (நேசம்மா) நேற்று (09 01-2001) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற டேவிற்யோசப் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தேவதாஸ் மற்றும் றனிலா எற்வேட். (ஜேர்மனி), றெஜினா (கனடா), அஞ்சலீனா (ஆசிரியை, முஸ்லிம் மகாவித்தியாலயம், வவுனியா), கிறேஷியன் (உரிமையாளர் ஜோசப் வெல்டிங் வேக்ஸ் சொப், யாழ்ப்பாணம்), றுபினா (சுவிஸ்), ஜோன்சன் (ஜேர்மனி), ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான, பாக்கியம், சேவியர், அந்தோனிப்பிள்ளை, நவம், நடராசா மற்றும் ராசம்மா (கொழும்பு) ஆகியோரின் சகோதரியும், றெஜினோல்ட் (U. N. D. P.) பாலசிங்கம் (சுவிஸ்), காலஞ்சென்ற ஸ்ரலின் மத்தியூஸ், மற்றும் கணேசலிங்கம் (சுவிஸ்), அல்போன்சா, டக்மர் (ஜேர்மனி), மேரிஎல்சி, நோறின் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும், ஷாமினி (சுவிஸ்), டெல்சின், றாஜ் (கனடா), றீனி (கனடா), தர்ஷான் (வவுனியா), சுஜீவன் (மாணவன் புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்), அனோஜன், செந்னா (சுவிஸ்), அபிஷனா (சுவிஸ்), ஜோன் ஹறி (ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10 –01—2001) புதன்கிழமை மாலை 3-80 மணிக்கு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**யோ. கிறேஷியன் [மகன்]**

466/4 சஞ்யுவானியார் ஒழுங்கை.
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.
(82775)

## கடைகளில் சோதனை

ஊர்காவற்றுறை, ஜன. 10

ஊர்காவற்றுறை நகரில் அமைந்துள்ள வியாபார நிலையங்களில் கடந்த திங்களன்று ஊர்காவற்றுறை பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் திடீர்ப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது ஒவ்வொரு வியாபார நிலையங்களிலும் காலாவதியான பிஸ்கற் வகைகள், குளிர்பானங்கள், பால்மா வகைகள், இனிப்பு வகைகள் என்பன விற்பனை செய்யப்படுகின்றனவா எனப் பரிசோதிக்கப்பட்டது. (ம-16)

## நலன்புரி முகாம்களில் மலசல கூட வசதி

தென்மராட்சி, ஜன. 10

பளைப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து கரவெட்டி கோயில் சந்தைப் பகுதி முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்குப் பளைப் பிரதேச சபையினர் ஒரு லட்சம் ரூபா செலவில் தற்காலிக மலசல கூடங்களை அமைத்து வருகின்றனர்.

இதற்கான நிதியினை வடக்கு — கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் க. சபாதிப்பிள்ளை பிரமாண அடிப்படையிலான வேதன நன் கொடை நிதியிலிருந்து வழங்கியுள்ளார். (ஒ-117)

## சமுர்த்தி செயலணி கூட்டம்

நவாலி, ஜன. 10

இளவாலை ஜே155கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கான சமுர்த்தி செயலணிக் குழுக் கூட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி திங்கள் காலை 10-00 மணிக்கு இளவாலை காந்தி கல்வி நிலையத்தில் சமுர்த்தி முகாமையாளர் என். சுசீந்திரராசா தலைமையில் இடம் பெறும்.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகன் கலந்து கொள்வார்.

(ஐ-100)

★ ★ ★

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த பண்டத்தரிப்பு ஜே—146 கிராம அலுவலர் பிரிவுக்கான சமுர்த்தி செயலணிக் கூட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பண்டத்தரிப்பு ஜெசிந்தா பாடசாலையில் சமுர்த்தி முகாமையாளர் ந. சுசீந்திரராசா தலைமையில் நடை பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகன் கலந்து கொள்வார்.

(ஐ- 100)

## கேணி புனரமைப்பு

சண்டிலிப்பாய், ஜன. 10

கோப்பாய் தெற்கு கற்பக விநாயகர் ஆலயத்தின் தீர்த்தக் கேணி அடியார்களின் உதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது. இங்கு புதிய சுற்றுமதிலும் அமைக்கப்பட்டு வருகின்றது.

(ஐ-135)

## திருவாசகம் முற்றோதல்

சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 6 மணி தொடக்கம் திருவாசகம் முற்றோதல் நடைபெறவுள்ளது.

சங்கீத பூஷணம் சு. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும். இந் நிகழ்வில் "கலாபூஷணம்" வி. என். செல்வராஜா, இசை ஆசிரியை திருமதி யசோ பற்குமார் ஆகியோர் உட்பட மற்றும் பலர் கலந்துகொள்வார்கள்.

(ஐ-135)


## ராஜா கல்வி நிலையம்
சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு.

### தரம் 5 புலமைப்பரிசில் பயிற்சிப்பரீட்சை

15-01-2001 அன்று முதலாவது பரீட்சை நடைபெறும். அதைத் தொடர்ந்து மாதம் இருமுறை பரீட்சைகள் நடைபெறும். சகலரும் பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவர்.

ஆசிரியர்: திரு. செ. தவராசா
கட்டணம் ரூபா 15

★ கல்வி நிலையங்கள், பாடசாலைகள் ஆகியவற்றிற்கு விசேட கழிவுண்டு, தொடர்புகொள்ளவும்.
= நிர்வாகி

(82781)


# மரண அறிவித்தல்கள்

## குமாரசாமி குணசிங்கம்
*(உதவித் தபாலதிபர் மூதூர்)*

சுதுமலை தெற்கு சாவற்கட்டைப் பிறப்பிடமாகவும், மூதூரை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி குணசிங்கம் நேற்று (09 – 01 – 2001) செவ்வாய்க்கிழமை திருகோணமலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், தமிழ்ச்செல்வியின் (வல்வெட்டித்துறை) அன்புக் கணவரும், தர்ஷன், திலக்ஷன், யுவலதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், அமரசிங்கம், கலாவதி, ஜெயசிங்கம், இராஜசிங்கம், தர்மசிங்கம், தயாபரன், சிறீதேவி (ஜேர்மன்), கேந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், திரு. திருமதி குணசீலன் (உத்தம சாத்திரி— வல்வெட்டித்துறை) ஆகியோரின் அன்பு மருமகனும், தமிழ்ச்செல்வி, அருங்கிளி, நாகதேவி, ரஜனி, அனுஷா, நித்தியராஜா (ஜேர்மன்), இரத்தினராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**கு. இராஜசிங்கம்**
(சகோதரன்)

சுதுமலை தெற்கு,
சாவற்கட்டு.
(82782)

## திருமதி நடேசபிள்ளை தவமணிதேவி
(மனோ)

இருபாலை கிழக்கு சிவன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வீமன்காமம் நெசவுசாலை வீதியை வசிப்பிடமாகவும், தற்போது சோடா பக்ரறி வீதி, குழமங்கால் மல்லாகத்தில் வசித்தவருமாகிய திருமதி நடேசபிள்ளை தவமணிதேவி (மனோ) 5- 1 - 2001 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடேசபிள்ளை (முன்னாள் சிமெந்து கூட்டுத்தாபன ஊழியர்) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான தாமோதரம் பிள்ளை—பொன்னம்மா தம்பதிகளின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி—தெய்வானைப் பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், பத்மினி கலா (ஐயா கடையடி, தற்பொழுது கனடா), உதய குமாரி (மல்லிகா), சாந்தகுமாரி (சுமதி-சுவிஸ்), ரசந்தினி, காலஞ்சென்ற நாகராசா மற்றும் குமுதினி (கொழும்பு), பாமிதரன் (பிரான்ஸ்), சுபாதரன் (மாணவன் அருணோதயாக் கல்லூரி), அமுதினி (மாணவி, மல்லாகம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஞானச்சந்திரன் (கனடா), கனகரத்தினம், நந்தகுமார் (சுவிஸ்), நாகராசா, ரவீந்திரன் (பிரான்ஸ்) மற்றும் தங்கராசா, ஜெயராஜா (பிரான்ஸ்), சந்திரராஜா (சிமெந்துக் கூட்டுத்தாபனம்), இந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் நவரத்தினம், காலஞ்சென்ற ராசேந்திரன் (கிளி) ஆகியோரின் அருமைச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கனகம்மா, நவரத்தினம் மற்றும் தேவி, தேவன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஜெகநாதன் சுகுணா, கலையரசி, கலைச்செல்வி, கௌரிதரன், கீர்த்தனா, கௌரீசங்கர், கபில்ராஜ், சுகிதரன், சூர்யா, சத்யா, நீதிதரன் (கனடா), ஜெனிஷா, ஜெனிஷான் (சுவிஸ்), கௌதமன், கபிலன், ராகுலன், ரஜீபன் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10-1-2001) புதன்கிழமை பிற்பகல் 2. 00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மல்லாகம் அலுக்கை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
**திருமதி நாகராசா**
(மகள்)

**திருமதி ஜெகநாதன்**
(பேர்த்தி)

தற்காலிக முகவரி:
N. நடேசபிள்ளை
சோடா பக்ரறி லேன்,
குழமங்கால், மல்லாகம்.
(82712)

## பாடசாலைகள் இயங்குகின்றன

தென்மராட்சி, ஜன. 10

புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் மாலை நேர பாடசாலையாக இயங்கி வந்த வடமராட்சி கிழக்கு பாடசாலைகளின் மாணவர்கள் கடந்த 2 ஆம் திகதி முதல் இப்பாடசாலையுடன் இணைக்கப்பட்டு கல்வி கற்று வருகின்றனர்.

அத்துடன் தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த கெற்பேலி அ. த. க. பாடசாலையும் இங்குகாலைநேரப் பாடசாலையாக இயங்கிவருகிறது.

இப்பாடசாலையில் பளை மத்திய கல்லூரி தற்போது மாலைநேரப்பாடசாலையாக இயங்கிவருகிறது.

(ம-117)

## கடையில் திருட்டு

ஆலய முகப்பில் இருந்த சூலம் ஒன்றைப் பிடுங்கி எடுத்த இனந்தெரியாத நபர்கள் அருகிலுள்ள பல சரக்குக் கடை ஒன்றின் கதவைப் பிரித்து அங்கிருந்து 5 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடி உள்ளனர்.

இச் சம்பவம் கடந்த புது வருடத்தினத்தன்றுஅதிகாலை பருத்தித்துறை கல்லூரி வீதியில் இடம்பெற்றது.

இங்குள்ள வைரவர் கோயிலின் சூலத்தை பிடுங்கிய திருடர்களே அருகில் உள்ள பொ. நல்லதம்பி என்பவரின் கடையை உடைத்துத் திருடிச் சென்றுள்ளனர்.

இது குறித்து பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தில் புகாரிடப்பட்டுள்ளது.

(ஐ-109)

## 39 ஹெக்டேயரில் உ. கிழங்குச் செய்கை

வலிகாமம் மேற்கு, ஜன. 10

யாழ். மாவட்டத்தில் இம்முறை உருளைக் கிழங்குப் பயிர்ச் செய்கை 39 ஹெக்டேயர்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உடுவிலில் 14 ஹெக்டேயரிலும், புத்தூரில் 16 ஹெக்டேயரிலும், உரும்பிராயில் 9 ஹெகடேயரிலும் இம்முறை உருளைக்கிழங்குப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கொழும்பிலிருந்து 97.5 மெற்றிக்தொன் விதை உருளைக்கிழங்கு கமநலத் திணைக்களத்தினால் கொண்டு வரப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

[ஐ-175]

## அந்தோனியார் ஆலயத்தில் வழிபாடு

அரியாலை, ஜன. 10

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் கடந்த வாரம் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

இந்த வழிபாட்டு நிகழ்வுகளில் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

பாஷையூர் பகுதியில் மீளக்குடியமர்வதற்கு இது வரை இப்பகுதி மக்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. ஆனால் புனித அந்தோனியார் ஆலயத்திற்குச் சென்று வழிபடுவதற்கு இராணுவத்தினர் பொது மக்களுக்கு அனுமதி வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-17)

## சமுர்த்தி செயலணிக்குழு அமைப்பு

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள மணல்காடு, குடத்தனை ஆகிய பிரிவுகளில் இன்று புதன்கிழமை சமுர்த்தி செயலணிக்குழுக்கள் அமைக்கப்படவுள்ளன. [ஐ-175]

# இடம்பெயர்ந்தோர் சங்கத்தினர் அமைச்சர் டக்ளஸுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன. 10

தென்மராட்சியில் விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் மக்கள் விரைவாக மீளக்குடியமர அனுமதி பெற்றுத்தர வேண்டும் என்று தென்மராட்சி இடம் பெயர்ந்தோர் நலன் புரிச்சங்கம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேற்படி சங்கத்தின் தூதுக் குழு ஒன்று அமைச்சரை நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடிய சமயமே இந்தக் கோரிக்கையை முன் வைத்தது.

விடுவிக்கப்பட்டுள்ள தென்மராட்சிப் பகுதியில் கண்டி வீதியின் இருபுறமும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இருந்து எழுதுமட்டுவாழ்வரை மக்கள் மீளக்குடியமரக்கூடிய பிரதேசமாகவுள்ளன என்றும் -

இந்தப் பிரதேசத்தில் பொறிவெடி அபாயங்கள் எதுவும்இல்லாததால் மக்கள் மீளக்குடியமர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்—

தூதுக்குழு அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தது.

நாவற்குழி, கைதடி, மட்டுவில், நுணாவில் மற்றும் சரசாலையின் ஒருபகுதி ஆகிய பிரதேசங்களில் மிதிவெடி, பொறிவெடிகள் உள்ளதால் அவற்றை அகற்றி அங்கு மக்கள் குடியமர ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும்—

தூதுக்குழு அமைச்சரிடம் கோரியது.

இடம் பெயர்ந்தோர் நலன் புரி அமைப்பின் தலைவர் த. சபாநாயகம் தலைமையில் சென்ற குழுவின் செயலாளர் செ. நாகேந்திரன், பொருளாளர் சதாசிவமூர்த்தி, உப செயலாளர் கே. சிவஞானசுந்தரம் செயற்குழு உறுப்பினர்களான க. கிருபானந்தக்குருக்கள், ம. சிதம்பரநாதன், த இராசநாயகம் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

அமைச்சரிடம் தூதுக்குழு சமர்ப்பித்துள்ள மகஜரில விடுக்கப்பட்டஏனையகோரிக்கைகள் வருமாறு:-

★ மாலை நேரப் பாடசாலைகள் அனைத்தும் காலைநேரப் பாடசாலைகளாக இயங்க நடவடிக்கை எடுக்கப்படல்வேண்டும். இது பற்றி கல்விப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு தேவைக்கேற்ப தற்காலிக மண்டபங்கள் அமைக்கப்பட வேண்டும் இவை அனைத்தும் மீளக்குடியமரும் போது தென்மராடசிக்கு எடுத்துச் சென்று மீள நிர்மாணிக்கப் படவேண்டும். இதற்கான நிதியை ஒதுக்கித்தர வேண்டும்

★ தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்த மாணவர்களின் ஜி சீ ஈ (உ.த), 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் வெட்டுப் புள்ளிகள் குறைக்கப்படல் வேண்டும்.

★ தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்த ஆசிரியர்கள் அவ்வப் பாடசாலைகளில் கடமையேற்க வேண்டும் அல்லது மாணவர் தொகைக்கேற்ப ஆசிரியர்கள்நியமனம் செய்யப்படல் வேண்டும்.

★ தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களின் உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்படக் கூடாது இந் நிவாரணம் மீளக்குடியமர்ந்த பின்னரும் சுமுகநிலையடையும் வரை தொடர வேண்டும்.

★ மக்கள் மீளக்குடியமரும் போது ஒவ்வொரு குடியிருப்புக்கும் தலா ரூபா 10,000 க்குக் குறையாத தொகை உடனடியாக வழங்கப்படல் வேண்டும். இதற்கான நிதி ஒதுக்கீடுகளையும் முன் நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

★ யுத்த நடவடிக்கையினால் அழிந்த சொத்துக்களிற்கான நஷ்டஈடு வழங்கப்படல் வேண்டும்.

★ புனரமைப்பு நிதிக்கு மேலாக வட்டியில்லாத இலகு கடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

★ மிதிவெடி, கண்ணிவெடிகள் அகற்றுவதற்கு நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

★ பாதிக்கப்பட்ட பொது நிறுவனங்கள் அனைத்தும் புனரமைக்கும் நடவடிக்கைக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படல் வேண்டும். [ஐ-3]

## ஊர்காவற்றுறைப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி

ஊர்காவற்றுறை, ஜன. 10

ஊர்காவற்றுறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி போடும் பணி இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

தடுப்பூசி போடப்படும் இடங்கள் நேரம் தொடர்பான விவரங்கள் வருமாறு:-

இன்று

★ 10-15 — 11-15—கரம்பன் தெரேசா பாலர் பாடசாலை.

★ 11-30 — 12-30 — பிரதேசசபை தலைமை அலுவலகம்.

★ 12-45 1-45 —ஜே—50 கிராம சேவை அலுவலர் அலுவலகம் பருத்தியடைப்பு

★ 2-00—3-00 — இருதய ஆண்டவர் ஆலயம் நாரந்தனை.

★ 3-15—4-00 — முருகமூர்த்தி கோயில், கரம்பன் மேற்கு.

நாளை

★ 10-15 — 11-15 — மெலிஞ்சிமுனை சனசமூக நிலையம்.

★ 11-30—12-30 — புளியங்கூடல் நெசவு நிலையம்.

★ 12-45—1-45—ஜே—59 கிராம சேவை அலுவலர் அலுவலகம், சுருவில்.

★ 2-00 — 3-00 — சின்னமடு தேவாலயம்.

★ 3-15—4-00 நாரந்தனை அண்ணா பாலர் பாடசாலை.

பொதுமக்கள் தமது வளர்ப்பு நாய்களை அண்மையிலுள்ள நிலையங்களுக்குக் கொண்டு சென்று தடுப்பூசி ஏற்றிக் கொள்ளுமாறு ஊர்காவற்றுறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அறிவித்துள்ளார். (ஐ-16)

### ஊர்காவற்றுறையில் மீளக் குடியமர்ந்த

# 58 குடும்பங்களுக்கு ரூ.5,000கொடுப்பனவு

ஊர்காவற்றுறை, ஜன. 10

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் இடம் பெயர்ந்து மீளக்குடியமர்ந்தோருக்கான 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு மேலும் 58 பேருக்கு வழங்கப்படவுள்ளது.

இதற்கான காசோலைகள் யாழ். செயலகத்தினால் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக திட்டமிடல் பிரிவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இன்று அவை உரிய வங்கிகளுக்குக் கொடுப்பனவிற்காக அனுப்பி வைக்கப்படும் என்று ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஆர். குமாரசாமி சர்மா தெரிவித்தார்.

இக் கொடுப்பனவு ஊர்காவற்றுறையில் 33 பேருக்கும், காரைநகரில் 25 பேருக்கும் வழங்கப்படவுள்ளதாகவும் இவர்களின் பெயர் விவரங்கள் உரிய கிராம சேவை அலுவலர்கள்ஊடாகஉரியவர்களுக்கு அறிவிக்கப்படும் எனவும் அதன் பின்னர் வங்கிக்குச் சென்று கொடுப்பனவை பெற்றுக் கொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

(ஐ—16)

## விஞ்ஞானச் சங்கம் நடத்தும் போட்டிகள் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம். ஜன. 10

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள பாடசாலைகளுக்கிடையிலான விஞ்ஞான நிகழ்ச்சி நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து மூன்று நாள்கள் நடைபெறவுள்ள நிகழ்வுகளில் வினாவிடைப் போட்டி, கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி மற்றும் கண்காட்சிப் போட்டி என்பன இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்துக் கல்லூரியின் அதிபர் அ. ஸ்ரீ குமரன் கலந்து கொள்ளவுள்ளார்.

முதல் நாள் நிகழ்வுகள் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 4 மணி வரையும் இரண்டாம் நாள் நிகழ்வுகள் காலை 8. 30 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 4 மணி வரையும் மூன்றாம் நாள் நிகழ்வுகள் காலை 8. 30 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 2 30 மணி வரையும் நடைபெறவுள்ளன.

வினாவிடைப் போட்டியில் 39 பாடசாலைகளும், கட்டுரைப் போட்டியில் 39 பாடசாலைகளும், பேச்சுப்போட்டியில் 38 பாடசாலைகளும், விஞ்ஞானகண்காட்சிப் போட்டியில்30 பாடசாலைகளும் கலந்துகொள்கின்றன.

(ஐ—10)

## விழிப்புணர்வு

மானிப்பாய், ஆனைக் கோட்டைப் பகுதிகளில் சிலருக்கு காசநோய் ஏற்பட்டுள்ளதாகக் கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்து இப்பகுதிகளில் காசநோய் பற்றிய விழிப்புக் கருத்தரங்குகளை நடத்துவதற்கு சுகாதாரப் பகுதியினர் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

காசநோய் பற்றிய விழிப்புணர்வுப் படக்காட்சிகளும் இப் பகுதிகளில் காண்பிக்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது. (ம — 135)

## திருத்தப்படாத நிலையில் வீதி

யாழ்ப்பாணம், ஜன. 10

வளலாய்ப் பகுதியில் உள்ள நெசவு நிலைய வீதி கடந்த 10 வருடங்களுக்கு மேலாகத் திருத்தப்படாமல் குன்றும் குழியுமாக இருக்கின்றது. இதனால் இந்த வீதியில் பயணம் செய்யும் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

இந்த வீதியைத் திருத்துவதற்கென கடந்த வருடம் நிதி ஒதுக்கப்பட்டதாக தயக்குத் தெரிவித்திருந்த போதும் இதுவரை இந்த வீதி திருத்தப்படவில்லை என்று பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர்.

வீதியின் இரு பக்கமும் பற்றைகள் வளர்ந்து காடு போல் காட்சியளிப்பதாகவும் இது தொடர்பாகப் பிரதேச சபையினருக்கு முறையிடப்பட்ட போதும் இதுவரை எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனவும் கூறப்படுகிறது.

(ம—6)

## விசேட அடையாள அட்டை பெற நடவடிக்கை

தென் மராட்சி, ஜன. 10

பச்சிலைப்பள்ளி பிரதேசத்திலிருந்து இடம்பெயர்வதற்கு முன்னர் விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பித்து இதுவரை விசேட அடையாள அட்டை கிடைக்காதவர்களுக்கு விரைவில் அவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக யாழ். அரச அதிபர் உறுதியளித்துள்ளார்.

அண்மையில் பச்சிலைப் பள்ளி இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கத்தினர் யாழ். அரச அதிபரைச் சந்தித்து உரையாடியபோது விசேட அடையாள அட்டைகள் பெற்றுக் கொடுப்பதற்கு உரிய அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வருவதாக யாழ். அரச அதிபர் உறுதியளித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(ம— 117)

## இசை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜன. 10

வடபகுதியில் காணாமல் போனோரின் குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களின் துயர் துடைப்பு நிதிக்காக யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் இசை நிகழ்ச்சி ஒன்றை நடத்தவுள்ளது.

இந்த இசை நிகழ்ச்சி எதிர் வரு 14 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு அச்சுவேலி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

காணாமல்போனோரின் குடும்பங்களினது சிறுவர்களின் எதிர்காலத்திற்கு உதவிடும் நோக்கத்துடன் கலைப்பீட மாணவர்கள் முன்னெடுத்துள்ள இந்த நிதி சேகரிப்புத் திட்டத்திற்கு அனைத்து மக்களும் ஆதரவு தரவேண்டும் என்று கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் கோரி உள்ளார். (ம-6)

## தையல் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஜன. 10

பருத்தித்துறை மற்றும் கரவெட்டிப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனங்களினால் தட்டச்சு, தையல் ஆகிய பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப் படவுள்ளன.

மேற்படி பயிற்சிநெறிகளில் பங்குகொள்ள ஆர்வமுடையோர் இம் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்பு தமது விண்ணப்பங்களை அந்தந்தப் பிரதேச சம்மேளனக் காரியாலயத்துக்கு அனுப்பி வைக்குமாறு இளைஞர் சேவை அலுவலர் தெரிவித்துள்ளார்.

(ஐ-10)

## நன்றி கலந்த நெஞ்சோடு....

கடந்த 31 - 12 - 2000 அன்று மீளாத்துயில் எய்திய எனது அன்புக் கணவர்

**பொன்னையா கமலரூபன் அவர்களின்**

- இறுதி யாத்திரையில் கலந்து கொண்டவர்கள் —
- துன்பத்தில் பங்கெடுத்த யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர், தமிழ்த்துறை விரிவுரையாளர்கள், ஏனைய விரிவுரையாளர்கள் —
- அஞ்சலி உரையாற்றியவர்கள் —
- அவரின் மாணவர்கள், மாணவிகள் —
- கற்பித்த நிறுவனங்களைச் சார்ந்தவர்கள் —
- வைத்தியசாலையிலே வந்து துயரிலே கலந்தவர்கள் —
- நண்பர்கள், நலன்விரும்பிகள் —
- எம்துயரை தம்துயராய்க் கருதி உதவியவர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்து நிற்கின்றேன் —

மனைவி:
அகல்யா கமலரூபன்

வதிரி. (சி/14719)

## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

மல்லாகம் அருள்மிகு பழம்பதி விநாயகர் திருமுருகன் கருமாரி அம்பாள் தேவஸ்தான புனரமைப்புக்கு ரூபா 1, 50,000 நிதியுதவி வழங்கிய

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு—கிழக்கு இந்துசமய தமிழ் விவகார அமைச்சருமான

**கௌரவ கே. என். டக்ளஸ் தேவானந்தா**

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய

**திருவாளர் கா. வே. குகேந்திரன் (ஜெகன்)**

ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் வலி. வடக்குப் பிரதேச சபை உறுப்பினரும் காங்கேசன் துறைத் தொகுதி அமைப்பாளருமாகிய

**திரு. தி. சிவகுமார் (வேலு)**

ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் தொடர்ந்தும் இடிந்து போன எம் தேசத்தைக் கட்டியெழுப்பும் இவர்களது பணி தொடர எல்லாம் வல்ல பழம்பதி விநாயகர் திருமுருகன் கருமாரி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

பழம்பதி தேவஸ்தான சபையினரும்.
அடியார்களும்.

பழம்பதி தேவஸ்தானம்,
கே. கே. எஸ். வீதி,
மல்லாகம். (82745)

## அன்பு அப்பாவின் 31 ஆம் நாள் நினைவலைகள்



மண்ணில் 14 — 05 — 1935

விண்ணில் 11 — 12 — 2000

**அமரர் பொன்னுத்துரை தவச்செல்வம்**

பாரதனில் பிறப்பவர் எல்லோரும் இறப்பது நியதி எனினும்
உங்கள் திடீர் மறைவு தாங்க முடியவில்லையே அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாளைப் பிரார்த்திக்கின்றோம்.

நினைவகலாத
மனைவி, பிள்ளைகள், தாய், சகோதரர்கள், மைத்துனன்.

[Lanka Tours Ltd.]
தொல்புரம் மேற்கு,
சுழிபுரம். (82613)

## துரையப்பா விளையாட்டரங்கு கூரை திருத்தம்

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ். துரையப்பா விளையாட்டரங்கின் கூரைத் திருத்த வேலைக்கென யாழ் மாநகரசபையினால் 35 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

விரைவில் கூரையின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப் படவுள்ளதாக மாநகரசபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அண்மையில் வீசிய கடும் காற்றுக் காரணமாக விளையாட்டரங்கின் கூரைகள் தூக்கி வீசப்பட்டிருந்தன. அதனைப் புனரமைக்கவே தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம 10)

## தைப்பொங்கல் தேசிய விழாவாகக் கொண்டாடப்படும்

கொழும்பு, ஜன. 10

தமிழர் திருநாளான தைப் பொங்கலை ஒரு தேசிய விழாவாகக் கொண்டாட இன விவகார தேசிய நல்லிணக்க அமைச்சு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பான கூட்டம் ஒன்று எட்டியாந்தோட்டை பிரதேச செயலர் அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

தமிழர், சிங்களவர் மற்றும் முஸ்லிம் ஆகிய மூன்று இன மக்களையும் இணைத்து எதிர்வரும் 14 ஆம் திகதி தமிழ் சம்பிரதாயப்படி இப்பொங்கல் விழா எட்டியாந்தோட்டையில் கொண்டாடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. [ம-100]

## மருத்துவமனையில் தங்க நகை கண்டெடுப்பு

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்துக்குள் இருந்து சிறிய தங்கநகையொன்று கண்டெடுக்கப்பட்டு மருத்துவமனைப் பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் ஆதாரங் காட்டி அந்த நகையைப் பெற்றுக் கொள்ளுமாறு ஆஸ்பத்திரி நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது. (ஒ-15)

## நிவாரணக் கொடுப்பனவு இல்லை

தென்மராட்சி, ஜன. 10

தென்மராட்சி பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து எட்டு மாதங்களாகியும் வடமராட்சி பிரதேசத்தில் தங்கியுள்ள பல குடும்பங்களுக்கு உடனடி நிவாரணக் கொடுப்பனவான 2 ஆயிரம் ரூபா இதுவரை வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

## சமுர்த்தி செயலணி கூட்டம்

யாழ். பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட குருநகர் கிழக்கு ஜே/70, குருநகர் மேற்கு ஜே/71 கிராம சேவையாளர் பிரிவுகளில் சமுர்த்தி செயலணிக் குழுக்கள் அமைக்கும் கூட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கார்மேல் மாதா ஆலய மண்டபத்தில் வலயம் — 1 முகாமையாளர் திரு. எம். கியூமன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். பிரதேச செயலர் திரு. பா. செந்தில்நந்தனன் மற்றும் திட்டமிடல் அலுவலர் திரு. கே. மகேஸ்வரன், கணக்காளர் திரு. கில்பேட் குணம். கிராம உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-15)

## வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம், ஜன. 10

இம்மாதம் 7 ஆம் திகதி வரையும் வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

### சங்கானை

(169261ஏ), (169955ஏ), (169955பி), (169955சி), (169955டி), (172936ஏ), (172936பி), (172936சி), (174818ஏ), (174818பி), (174818சி), (174836ஏ), (174836பி), (175722ஏ), (175722பி), (175722சி), (175722டி), (175722ச), (175722எவ்), (175789ஏ), (175916ஏ), (175916பி), (176641ஏ), (176658ஏ), (176665ஏ), (176681ஏ), (176681பி), (176681சி), (176850ஏ), (176850பி), (176850சி), (176856ஏ), (176856பி), (176887ஏ), (176887பி), (176889ஏ), (176947ஏ), (176947பி), (176957ஏ), (176665ஏ), (178949ஏ).

### யாழ்ப்பாணம்

(173652ஏ), (175486ஏ), (175486பி), (175701ஏ), (175701பி), (178186ஏ), (178187ஏ), (178220ஏ), (178226ஏ), (178290ஏ), (178309ஏ), (178317ஏ), (178318ஏ), 178320ஏ), (178398ஏ), (178398பி), (178834ஏ)

### கோப்பாய்

(170563ஏ),

### நல்லூர்

(173088ஏ), (178181ஏ), (173182ஏ), (173182பி), (173188சி), (175256ஏ), (125839ஏ), (175839பி), (175992ஏ), (176550ஏ), (176852ஏ), (176942ஏ), (176946ஏ), (176946பி), (176946சி), (176961ஏ), (176974ஏ), (177009ஏ), (177009பி), (178532ஏ), (178939ஏ).

### சண்டிலிப்பாய்

(14386 ஏ), (143860பி), (176562ஏ), (176569ஏ), (176569பி), (176750ஏ), (176750பி), (176812ஏ), (176815ஏ), (176815பி), (176878ஏ), (176918ஏ), (176998ஏ), (176999ஏ), (178916ஏ), (178933ஏ), (178953ஏ), (178953பி), (178960ஏ), (178986ஏ), (178998ஏ), (178999ஏ).

### தெல்லிப்பழை

(146325ஏ), (173603ஏ), (175852ஏ), (175852பி), (175946ஏ), (175946பி), [175946சி], [176732ஏ], [176886ஏ], [176905ஏ], [176905பி].

### உடுவில்

[170379ஏ], [176517ஏ], [176633ஏ], [176688ஏ], [176700ஏ], [176707ஏ], [176844ஏ], [174844பி], [176844சி], [176853ஏ], [176853பி], [176853சி], [176991ஏ], [178917ஏ], [178912பி], [178931ஏ], [178932ஏ], [178932பி], [178958ஏ], [178958பி], [178976ஏ]. (ஐ-10)

## ஆசிரியர்கள் தேவை

பிரபல்யமான கல்வி நிறுவனம் ஒன்றிற்கு க. பொ. த (சா / உ) வரை எல்லாப் பாடங்களும் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் தேவை.

தகுதியும் அனுபவமும் வாய்ந்த கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவுக்கு அண்மையில் உள்ளவர்கள் 15-01- 2001 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

விள. இல. 1176, மே/பா. உதயன்.

(82750)

## எமிலியானுஸ்பிள்ளை தொழில்நுட்ப இலவசப் பயிற்சிநெறி

மேற்படி தொழில் நுட்ப நிறுவனத்தில் மின் இணைப்பு, மின் மீள முறுக்குதல், மின் ஒட்டு, மரவேலை ஆகிய பயிற்சி நெறிகள் இலவசமாக வழங்கப்படுவதால் 15 - 01 - 2001 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

பயிற்சி பெறும் மாணவர்களின் வகுப்புகள் 10 - 02 - 2001 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும்.

முகவரி:
இயக்குநர்,
தொழில் நுட்பக் கல்லூரி,
ஊர்காவற்றுறை.

(82726)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது வேலணை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் வளர்ச்சிக்கும் எமது பிரதேசத்தில் பனம் தும்பு உற்பத்தித் தொழிற்சாலை நிறுவுவதற்கும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்த

**உயர்திரு. மு. பாக்கியநாதன் (B.A.)**

பனை அபிவிருத்திச்சபைத் தலைவராக மீண்டும் நியமனம் பெற்றதையிட்டு வாழ்த்துவதுடன் இந்நியமனத்தை வழங்கிய வடக்கு அபிவிருத்தி புனர் வாழ்வு புனர்நிர்மாண தமிழ் விவகார இந்து கலாசார அமைச்சர் மாண்புமிகு கே. என். டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு எமது சங்கத்தின் சார்பில நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
அங்கத்தவர்கள்,
வே. ப. தெ. வ. அ. கூ. சங்கம்,
வேலணை. (82786)

# கேபிள் தொலைபேசி வசதி விரைவில் சித்தன்கேணி வரை

வலிகாமம் மேற்கு,ஜன.10

சித்தன்கேணிவரை கேபிள் தொலைபேசி இணைப்பு மிக விரைவில் வழங்கப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

சித்தன்கேணிச் சந்தியில் உள்ள தொலைத் தொடர்பு நிலையத்தில் இயங்கும் சங்கானை கோட்டக்கல்வி அலுவலகத்தை வேறு இடத்திற்கு மாற்றுமாறும் தொலைத் தொடர்பு நிலையத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

தொலைத் தொடர்பு நிலையத்தை அங்கு இயங்க வைப்பதற்கான ஆரம்ப வேலைகள் நடைபெறவுள்ளதாக திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

தற்போது சண்டிலிப்பாய் வரையுள்ள கேபிள் இணைப்பு சித்தன் கேணி வரை நீடிக்கப்பட்டு சித்தன் கேணியிலுள்ள தொலைத் தொடர்பு நிலையம் இயங்கும் பட்சத்திலும் இலகுவாக தொலைபேசி இணைப்புகளை பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஜ-175)


## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



தோற்றம் 1929 - 04 - 19

மறைவு 2000 - 12 - 22

### அமரர் செல்லையா இளையதம்பி (சாமி அப்பா) அவர்கள்

22.12.2000 அன்று இறைபதம் எய்திய எமது அன்புத் தந்தையின் அந்தியேட்டி *நாளை (11.01.2001) வியாழக் கிழமை* காலை 6.00 மணியளவில் எமது இல்லத்தின் அருகிலும் -

சபிண்டீகரணம் *13.01.2001 சனிக்கிழமை* முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும்.


அவ்வமயம் மேற்படி நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*துவாளி வீதி,*
*இமையாணன் மேற்கு,*
*உடுப்பிட்டி.*

மக்கள், மருமக்கள்.

(82787)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



மண் மகிழ 10-04-1910

கண் நெகிழ 23-12-1999

புங்குடுதீவு பட்டையகாரன்புலம் 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் வீரகத்தி கந்தையா

(வீயன்னா கானா)

திதி:- 10-01-2001

நடேசர் ஆர்த்திரா தரிசனம்

பண்போடு அறிவூட்டிப் பாங்காய் வளர்த்தீர்!
கண்போலக் கருதியுமே எமைக் காத்து நின்றீர்!
மண் பொலியத் தெய்வமென மாண்புடனே வாழ்ந்தீர்!
எண்ணமதில் என்றுமுமைப் பூஜித்து வாழ்வோம்!
எமை விட்டு பிரிந்து எங்குதான் சென்றீர் அப்பா!
உங்கள் ஆத்மா சிவன் தாளினையடைந்து
இன்புற்றிருக்க இறைவனை இறைஞ்சுகின்றோம்.

*புகையிரத நிலைய வீதி,*
*தபாற்கந்தோர் அருகில்,*
*சுன்னாகம்.*

- பிள்ளைகள்.

(82677)


## கைதான மீனவர்கள் விடுதலை

நெல்லியடி,ஜன.10

வடமராட்சி சக்கோட்டையில் நேற்று முன்தினம் அதிகாலை 6 மணிக்கு மீன் பிடிக்கச் சென்ற போது கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 10 மீனவர்களும் நேற்றுக் காலை 10மணிக்கு விடுதலை செய்யப்பட்டனர்.

பருத்தித்துறைப் பிரதேச சபைத் தலைவர் ஸ்ரீரங்கேஸ்வரன், உப தலைவர் பரஞ்சோதி ரவீந்திரன் ஆகியோர் இந்த மீனவர்களை விடுவிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-109)

## துண்டுப்பிரசுரம் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜன.10

கடந்த மாதம் 12 ஆம் திகதி உயிரிழந்த விடுதலைப்புலி உறுப்பினரான மேஜர் அருச்சுனனுக்கு (இராசலிங்கம் பவன், யாழ்ப்பாணம்) 31ஆம் நாள் அஞ்சலி செலுத்தும் துண்டுப் பிரசுரங்கள் நேற்று யாழ். குடா நாட்டில் பரவலாக விநியோகிக்கப்பட்டன. (உ)

## தீயணைப்புப் படையினர் சேவையில்!

யாழ்ப்பாணம்,ஜன.10

யாழ்மாநகர சபையின் தீயணைப்புப் படையின் தொழிற்பாடுகள் மற்றும் ஆளணி என்பன மறுசீரமைக்கப்பட்டு மீண்டும் அதன் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த 1980ஆம் ஆண்டு காலப் பகுதியில் கனேடிய அரசின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட தீயணைப்புப் படையின் நடவடிக்கைகள் சில காலம் ஒழுங்காக நடைபெற்று வந்தபோதும் பின்பு பல வருடங்களாக அது செயலிழந்திருந்தது.

தற்பொழுது மீண்டும் கனேடிய அரசினால் 30 லட்சம் ரூபா வழங்கப்பட்டதை அடுத்து அதன் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதனால யாழ். குடாநாட்டின் எந்தப் பகுதிக்கும் சென்று தமது சேவையை ஆற்றக் கூடிய நிலையில் தீயணைப்புப் படையினர் உள்ளனர் என்று யாழ். மாநகர சபையின் ஆணையாளர் வே.பொ.பாலசிங்கம் தெரிவித்தார்.

தொலைபேசி இலக்கம் -3556 மூலம் தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்தால் தமது சேவையை வழங்க யாழ்.மாநகர சபையின் தீயணைப்புப் படையினர் எந்நேரமும் தயாராக உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-10)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.10

சமுர்த்தி செயலணிகள் அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று குருநகர் கார்மேல் மாதா மண்டபத்தில் நாளைமறுதினம் வெள்ளிக் கிழமை நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ்.பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனனும சமுர்த்தி முகாமையாளர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-5)

## கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.10

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் யாழ். வை.எம்.சி.ஏயின் அனுசரணையுடன் நடத்ததும் ஆண், பெண இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் இன்று புதன் கிழமை கொக்குவில் இந்துக்கல்லூரி ஆடுகளத்தில் ஆரம்பமாகின்றது.

இன்றைய ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

ஆண்கள் பிரிவு-பிற்பகல் 5 மணி- யாழ்.மத்திய கல்லூரி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி.

பெண்கள் பிரிவு - பிற்பகல் 4 மணி- திருக்குடும்ப கன்னியர் மடம் ஆங்கிலப்பாடசாலை எதிர் யாழ்.இந்து மகளிர் கல்லூரி. (ம)

## சமுர்த்தி செயலணி அமைப்பு

யாழ்.பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட குருநகர் கிழக்கு J/70, குருநகர் மேற்கு J/71 கிராம சேவையாளர் பிரிவுகளில் சமுர்த்தி செயலணிக் குழுக்கள் அமைக்கும் கூட்டம் நாளை பி.ப. 3.00 மணிக்கு கார்மேல் மாதா ஆலய மண்டபத்தில் வலயம்-1 முகாமையாளர் திரு.M.கியூமன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்பிரதேச செயலர் திரு.பா.செந்தில்நந்தனன் மற்றும் திட்டமிடல் அலுவலர் கே.மகேஸ்வரன், கணக்காளர் திரு. கில்பேட் குணம், கிராம உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-15)


## சித்த மருத்துவ மாணவர் ஒன்றியம் யாழ். பல்கலைக்கழகம்

முதலாண்டு (புதிய) மாணவர்களுக்கான அவசரக் கூட்டம்

காலம் : 12.01.2001 வெள்ளிக்கிழமை காலை 10 மணி

இடம் : மாணவர் பொது அறை

சகல மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(82792) -செயலாளர்.

## கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய இராஜகோபுரத்திற்கு வர்ணம் தீட்டுதல்

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட இராஜகோபுரத்திற்கும் இரண்டு மணிக்கூட்டுக் கோபுரங்களுக்கும் வர்ணம் தீட்டுவதற்குத் தகைமையுடையோரிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது. 15.01.2001 திங்கட்கிழமைக்கு முன்னதாக ஆலயப் பணிமனையில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவும்.

ஆலய சேவையில்
கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய
நிர்வாகசபை

த.கணேசபிள்ளை, *தலைவர்*

இ.இராசலிங்கம், *செயலாளர்.*

(82789)

## கண்ணீர் அஞ்சலி



மண்ணில் 23 - 02 - 1952

விண்ணில் 09 - 01 - 2001

எமது சக ஊழியரான
சா.டிக்கன்ஸ் அவர்களின்
அன்புத் தந்தையார்

### ஞானேந்திரன் சாள்ஸ்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சக ஊழியர்கள்,
ஸ்ரீலங்கா ரெலிகொம்,
யாழ்ப்பாணம்.

(82790)

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான
பிரதமகுரு அமரர்
சிவஸ்ரீ சுவாமிநாத. இராஜேந்திரக் குருக்கள்
அவர்களுக்கு அந்தணப் பெருமக்கள்
ஒன்றிணைந்து நடத்தும்

## நினைவஞ்சலி நிகழ்வு

இடம்:- கதிரமலை சிவன் தேவஸ்தானம், சுன்னாகம்

காலம்:- இன்று (10-01-2001) புதன்கிழமை 1.00 (பு.நே.)

* அமரர் பற்றிய நீத்தார் நயப்புரைகளை அந்தண சிரேஷ்டர்கள் ஆற்றுவர்.

* 11.01.2001 வியாழக்கிழமை 1.00 மணிக்கு இணுவில் தருமசாஸ்தா குருகுலத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையாக வேதபாராயணம் நடைபெறும்.

இவ்விரு நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளுமாறு அந்தணர்களை அன்புடன் அழைக்கிறோம்.

(82686) - விழா அமைப்பாளர்கள்.

## நீதிமன்றம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மையாகக் கண்டிக்கிறது.

இதேவேளை -

நாட்டில் விலைவாசி உயர்வைக் கண்டித்தும், அரச நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்படுவதைக் கண்டித்தும், அரசுக்கு எதிராக நாடளாவிய ரீதியில் போராட்டம் நடத்தத் திட்டமிட்டுள்ளோம்.

பொலீஸாரின் தாக்குதலுக்குச் சுதந்திர ஊடகவியலாளர் சங்கமும் கண்டனம் தெரிவித்துள்ளது. (உ-6)

## நாளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதி மக்கள், நோயாளர்கள், அரச ஊழியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், இடமாற்றம் பெற்றுச் செல்வோர் ஆகியோர்களுக்கும் ரிக்கெட் வழங்கப்பட்ட பின்னர் மிகுதியாக இருக்கும் இடங்களுக்கே ஏனையோருக்கு ரிக்கெட் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பதிவுகள் யாவும் காலை 8மணி முதல் 11மணிவரை மட்டுமே மேற்கொள்ளப்படும் என்றும் -

பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் ரிக்கெட் வழங்கப்படும் என்றும் -

பயணம் செய்வோர் நாளை காலை 6 மணிக்கு பயண ஆயத்தங்களுடன் வடக்கு மீள் குடியேற்ற புனரமைப்பு அதிகாரசபை அலுவலகத்துக்கு வர வேண்டும் என்றும் - தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-ம)


நாளை ஆரம்பம்!

வங்கி இணக்கக்கூற்று

A/L 2001

DAY CLASS

கணக்கீடு

D.SAM

காலை 9 மணி

DMI யாழ்நகர்

(C/14699)


## சொல்ஹெய்ம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசுத் தரப்பிலிருந்து காட்டப்பட்ட 'பச்சைக்கொடி' சமிக்ஞையை அடுத்தே எரிக் சொல்ஹெய்ம் கொழும்பு விரைவதாகக் கூறப்படுகின்றது.

எனினும் அரசுத் தரப்பிலிருந்து பச்சைக்கொடி காட்டப்பட்ட விடயங்களின் விவரம் என்ன என்பது இச் செய்தி அச்சுக்குப் போகும்வரை தெரியவரவில்லை.

கடந்த வாரம் இந்தியா சென்றிருந்த எரிக் சொல்ஹெய்ம் அங்கு இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயம் தொடர்பாக இந்திய்த் தலைவர்களுடன் பேச்சு நடத்தினார்.

பின்னர் அங்கிருந்து லண்டன் சென்ற அவர் அங்கு விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் பேச்சு நடத்தியதாகக் கூறப்படுகின்றது.

விடுதலைப் புலிகளின் யுத்தநிறுத்தத்தை நிராகரித்தமைக்கு அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்ட காரணங்களை அவர் பாலசிங்கத்துக்கு விளக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைவரும் சொல்ஹெய்ம் ஜனாதிபதியுடனும் எதிர்க்கட்சித் தலைவருடனும் நடத்த உள்ள பேச்சுக்கள் அந்தரங்கமானதாக இருக்கும் என்றும் -

அவற்றின் விவரங்கள் எவையும் வெளியிடப்பட மாட்டாது என்றும் - மேலும் கூறப்பட்டது. (உ-ம)

## உடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதில் தனது அரசு நாட்டம் கொண்டுள்ளதாகவும் -அண்மையில் இடம்பெற்ற - இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின்- கூட்டத்தின்போது ஐரோப்பிய யூனியன் இந்த விடயத்தில் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்ததாகவும் - நெதர்லாந்துத் தூதர் தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

இதேவேளை -

இன்று புதன்கிழமை தமிழ்க்கட்சிப் பிரதிநிதிகள் பிரிட்டிஷ் தூதுவர் லிண்டா டபீல்ட் அம்மையாரைச் சந்தித்துப் பேசவுள்ளனர். நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை அவர்கள் இந்தியத் தூதரைச் சந்தித்துப் பேசுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.(உ-ம-6)

## 3 மாணவர் இடைநிறுத்தம்

கொழும்பு,ஜன.10

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் அண்மையில் மாணவருக்கிடையில் நடைபெற்ற கைகலப்புச் சம்பவங்களுடன் தொடர்புடைய 3 மாணவர்களை பல்கலைக்கழக செயற்பாடுகளிலிருந்து பல்கலைக்கழக நிர்வாகம் இடைநிறுத்தியுள்ளது.

மதுபோதையிலிருந்த சமயம் மாணவர்களுக்கிடையில் இடம் பெற்ற தகராறு தொடர்பாக ஆரம்ப விசாரணைகளை மேற்கொண்ட பல்கலைக் கழக நிர்வாகம் இந்த 3 மாணவர்களையும் இடைநிறுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-3)

## பளை மத்திய கல்லூரி மாணவருக்கு!

தென்மராட்சி,ஜன.10

பளை மத்திய கல்லூரியில் கல்வி கற்று இடம்பெயர்வின் காரணமாக தற்போது வடமராட்சி,வலிகாமம் ஆகிய வலயப் பாடசாலைகளில் கல்விகற்கும் மாணவர்களுக்கு இலவச சீருடைகள் பெற்றுக்கொடுப்பதற்காக பளை மத்திய கல்லூரி மாணவர்களை பின்வரும் இடங்களில் இன்றும் நாளையும் தமது விவரங்களைப் பதிவு செய்யுமாறு கல்லூரி அதிபர் க.குணபாலசிங்கம் அறிவித்துள்ளார்.

வடமராட்சி வலயப் பாடசாலைகளில் கல்விபயிலும் மாணவர்கள் புலோலி மெ.மி.த.க.பாடசாலையில் இயங்கும் கல்லூரியிலும் வலிகாமம் வலயப் பாடசாலைகளில் கல்விகற்கும் மாணவர்கள் திருநெல்வேலி இராமலிங்கம் வீதியிலுள்ள அதிபரின் அலுவலகத்திலும் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-117)


விக்னா

கல்வி நிறுவனம்

A/L 2003

ஆரம்பம்:சனி 13.1.2k1

| | | |
|---|---|---|
| Log. | திரு.சயந்தன் | 8.45 |
| Tam. | திரு.லிங்கம் | 11- 12 |
| H.C. | திரு.பத்மராஜா | 8.00 |
| I.Q. | திரு.அன்ரன் | 10-11 |
| Chir. | திரு.வசந்தன் | 9-10 |
| Dra. | திரு.மதி | 12-1.00 |
| His. | திரு.அன்ரன் | 12-1.00 |
| Geo. | திரு.ஐங்கரன் | 1-2 |

(82769)


# கல்வியியல் கல்லூரி அனுமதிக்கான நேர்முகப் பரீட்சைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.10

யாழ்ப்பாணம்,வவுனியா மட்டக்களப்பு ஆகிய தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் இன்று புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 13 ஆம் திகதி வரை நடைபெறும் என்று யாழ்.கல்வியியல் கல்லூரி பீடாதிபதி தி.கமலநாதன் அறிவித்துள்ளார்.

வவுனியா கல்வியியல் க[illegible] பீடாதிபதி எஸ்.அழகரத்தினம் தலைமையிலான குழு யாழ்.கல்வி வலய அலுவலகத்தில் இந்த நேர்முகப் பரீட்சையை நடத்தவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கான கடிதங்கள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக மேலதிக விவரங்களை அறிய விரும்பும் மாணவர்கள எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு முன்னர் நேர்முகப் பரீட்சை நடைபெறும் அலுவலகத்தில் தொடர்பு கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு விண்ணப்பம் செய்த தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சைக் கடிதங்கள் வடமராட்சியில் இயங்கும் தென்மராட்சிப் பகுதி தபாலகங்களில் உளளதாகவும் -

உரியவர்கள் தமது கடிதங்களைப் பெற்றுக் கொள்ளுமாறும் தபாலதிபர்கள் அறிவித்துள்ளனர். (உ-6)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மாணிக்கவாசகர் பூமணி

ஆனைக்கோட்டை, உயரப்புலத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி மாணிக்கவாசகர் பூமணி நேற்று (09.01.2001) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து மாணிக்கவாசகரின் **(P.W.D.)** அன்பு மனைவியும் ஜெயக்குமார் (கிளை முகாமையாளர், ப.நோ. கூ.ச.,மானிப்பாய்), உதயகுமார் (வவுனியா), சாந்தகுமாரி சிவபாலசுந்தரம ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வரமணி (திருமலை), சிவபாலசுந்தரம் (கிளை முகாமையாளர் ப.நோ.கூ.ச.,மானிப்பாய்.), உமாதேவி (**R.D.A** வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் சாருகேசன், பிரதீபன், கம்சதுவனி, சுவமதி, சுவசக்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2001) புதன்கிழமை ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காக்கைதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

*உயரப்புலம்.* (C/14731)

தகவல்:
மா.ஜெயக்குமார்
(மகன்)

## வல்லிபுரம் துரைசிங்கம் (பயில்வான்)

**(மதுபான நிலைய உரிமையாளர்-பருத்தித்துறை)**

புலோலிதெற்கைச் சேர்ந்த வல்லிபுரம் துரைசிங்கம் 5-1-2001 அன்று காலமானார்.

அன்னார் கனகேஸ்வரியின் அன்புக் கணவரும் திருநாவுக்கரசு, கிருஷ்ணபிள்ளை, சூரியப்பிரகாசம், சந்திரப்பிரகாசம் ஆகியோரின் அன்புத் தமையனாரும் தவேந்திரன் (ஜேர்மனி),ருக்குமணிதேவி (ஜேர்மனி),அமரர் லட்சுமி, அமரர் கிருஷ்ணானந்தன், அமரர் தெய்வேந்திரன் மற்றும் சுவேந்திரன்(ஜேர்மனி), யோகேஸ்வரி (லண்டன்), சாந்தரூபனி (லண்டன்), றஞ்சிதமலர் (ஆஸ்திரேலியா), சுபேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் அமரர் நாகலிங்கம், அமரர் பாலகிருஸ்ணன் மற்றும் மகேநதிரன், சிவகுமார், அமிர்தலிங்கம், திருமதி தவேந்திரன் வாஜினி தேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் பானுதேவன், நந்ததேவன், நிமலதேவன், சத்தியதேவன், ரஜனிகாந்த், ஸ்ரீகாந்த், பெரியகண்ணன் சின்னக்கண்ணன், கௌசல்யா, தட்சாயினி, பவானந்தன், துஷ்தா, சிவதர்ஷினி, ராயுராம், ரகுராம், தீபன், அரவிந்தன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10-01-2001) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூத வுடல் பருத்தித்துறை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

*புலோலி தெற்கு*
*பருத்தித்துறை.* (82770)

தகவல்:
துரைசிங்கம் கனகேஸ்வரி
(மனைவி)

## திருமதி செல்லர் லட்சுமி

கலைவாணி வீதி, தொல்புரம் மேற்கைச் சேர்ந்த திருமதி செல்லர் லட்சுமி நேற்று (09.01.2001) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் செல்லரின் அன்பு மனைவியும், முருகையா (மின்சார சபை, யாழ்ப்பாணம்), சின்னராசா, பாக்கியம் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2001) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மூளாய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

*கலைவாணி வீதி,*
*தொல்புரம் மேற்கு,*
*மூளாய்.* (C/14730)

தகவல்:
து.ரவியழகன்

## திருமதி வேலுப்பிள்ளை நாகம்மா

திருமதி வேலுப்பிள்ளை நாகம்மா நேற்று (09.01.2001) செவ்வாய்க் கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் மனைவியும் கனகசிங்கம், தில்லைநாயகி (ஓய்வுபெற்ற ஆசிரியை), கலாநிதி காசிநாதன் (ஆஸ்திரேலியா), தனலக்சுமி (உதவி அதிபர், பரு.மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி), கிருஷ்ணன் (கனடா), சட்டத்தரணி திலகேஸ்வரி (கனடா), சட்டத்தரணி கமலநாதன் (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெகநாதன் (கனடா), நாளினி (ஆஸ்திரேலியா), வசந்தா தேவி (டென்மார்க்) அகியோரின் அன்பு மாமியாரும், திருமகள், பிரிய தர்சினி, சஞ்சயன், சங்கரன், நிவேதிதா, ஹரிரமணன், அபிராமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு பருத்தித்துறை கோரி மயானத்தில் நடைபெறும்.

*தெளி வீதி,*
*பருத்தித்துறை.* (C/14732)

தகவல்:
வே.கனகசிங்கம்
(மகன்)


S. L. C. D. L. EXAMINATION.

SRI LANKA COMPUTER DRIVING LICENCE (SLCDL)

S. L. C. D. L. Exam will be start from 16th of January.
Registered candidates please contact in our office and arrange your examination preparation immediately at your earliest.

Director(Ad.)

DCS

COLLEGE OF COMPUTER TECHNOLOGY

(British ACP Recognized training centre)

T.p.no : 021-2596 e-mail :dcsjaf@sltnet.lk

124/2, Palaly Road, Thirunelvely.



புதிய பிரிவுகள் ஆரம்பம்

14-01-2001

மேலதிக விபரங்கள் உள்ளே

புலமைப்பரிசில் போட்டிப் பரீட்சை முடிவுகளை இன்றிலிருந்து தலைமை அலுவலகத்தில் பார்வையிடலாம்.

100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். இயக்குனர் IIS



ஆரம்பமாகிறதா? ஆம்!

கணக்கீடு

A/L 2002

பங்குடைமை




ஆரம்:11.01.01→ 3.30

BEACON

வெலிங்டன் சந்தியருகில்

(82597)



மாபெரும் இசை நிகழ்ச்சி

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களும்
யாழ்.முன்னணிக் கலைஞர்களும் இணைந்து
தைப்பொங்கல் தினத்தன்று வழங்கும்

"இன்னிசை மாலை"

காணத் தவறாதீர்!

இடம் : கொக்குவில் இந்துக் கல்லூரி
நேரம் : மாலை 3.00 மணி (இ.நே.)

வணிக மாணவர் மன்றம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

*விளம்பர அன்பளிப்பு:*

அழகுசாதனம், அலங்காரப் பொருள்கள்,
எவர்சில்வர்-அலுமினிய-பிளாஸ்ரிக் வகைப் பொருள்களை
நியாயமான விலையில் மொத்தமாகப் பெற்றுக்கொள்ள

கௌரி அழகு மாடம்

இல.316, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 021-3227

(82649)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.01.2001 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.